# ஸ்ரீ பாரதி

சமய சஞ்சிகை

(கதைகள்—கட்டுரைகள்—கவிதைகள்)


| வால்யம்-1 | அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு. | பிரசுரம்-1/24 |
|---|---|---|


2401


பதிப்பாசிரியர்

எம். எஸ். ராஜன்



ஸ்ரீ பாரதி புத்தகாலயம்

சூளை, சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1945 [விலை அணா 4

# தீர இளைஞனே திருந்திப் பார்!
## (கோடை இடி)

கடவுளைக் காணவேண்டுமென்று கதறித் திரிவதினும்,
கதியற்ற மக்களைக் கண்காணிக்கக் கருதும்
கருத்துக்களைக் காரிய உலகில்
காட்ட விரும்புவது சிறந்தது!

மதத்தின் பெயரால் வாழவிரும்பும் மனிதன்,
பலரை ஏமாற்றி வாழ்வதோடு, தன்னையும்
ஏமாற்றிக் கொண்டவனாகவே ஆகிறான்!

மனிதன் தன் மனக்கருத்தைக் காட்டி,
உலகத்தைப் புதுப்பிக்க விரும்புகிறானே தவிர,
பழமையில் மூழ்கிப் பாழடிமைப் பட்டு
பண்பற்றிருக்க வல்ல!

கஷ்டத்தைக் கண்டு கலங்காதே!
இளமையில் பெருத்த வறுமைக்கும், தோல்விக்கும்
இரையானவரே—முதுமையில் பெரியோராக
விளங்குபவரெல்லாம் என்பதை மறவாதே.

Printed At
Sri Bharathi Press, Choolai, Madras

# பதிப்புரை.

அறியாமையில் மூழ்கி, அடிமையில் அல்லல் அடைந்து, ஜாதி, மதபேதச் சங்கடங்கள் நிறைந்து எழுத்தறிவின்றி, எண்ணற்ற ஏழை மக்கள் நிரம்பியுள்ள நம் நாட்டில் எத்தனையோ ஏடுகள் நிரம்பி இருக்கின்றன. ஆயினும் ஒரு சில உயரிய கருத்துடைய ஏடுகளைத் தவிர, இதர ஏடுகள், ஜாதி, மத பேதங்கள் நிறைந்து, கட்சிப் பூசல்கள் மிகுந்து, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று எவரும் ஏற்கும் இதமான கொள்கையைக் கொண்ட நம் நாட்டில், கடவுளைக் கண்டபடி பிரிக்கும் கட்டுரைகளும், மக்கள் மனத்தை மாசுறும்படி செய்யும் மலிந்த கற்பனைகளும் செறிந்து மக்கள் சந்தையிலே மலிந்து, ஏழை மக்களின் அறிவைப் பாழ்படுத்தும் நிலையில் அமைந்துள்ளன வாகையால், மக்கள் அறிவை மாண்புறச் செய்யும், நிலைமையிலே, கற்பனைகள், கதைகள், காவியங்கள், கட்டுரைகளால், எளிய இனிய தமிழைக் கொண்டு எல்லோரும் படித்துணரும் வண்ணம் மிளிரும், இம்மலரை மக்கள் மன மகிழ்ச்சியுடன் வரவேற்று, இன்புற்று இதமடைந்து குற்றம் நீக்கி, குணம் கொண்டு மாண்புற் றிருப்பார்க ளாக!

**எம். எஸ். ராஜன்.**

ஓம்

சாந்தி ! சாந்தி !! ராந்தி !!!



அன்பு வாழ்க ! அமைதி நிலவுக !!

# அறிவிப்பு!

வாசகர்களுக்கு,

நாம் இவ்வருடம் நமது சங்கத்தின் சார்பில் 24 - புஸ்தகங்களை அவ்வப்பொழுது தமிழ் மக்களிடமிருந்து பெறப்படும் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் முதலியனவற்றை தொகுத்து தனித் தனி புஸ்தகங்களாக வெளியிடத் தீர்மானித்துள்ளோம். நமது சங்கத்தின் நோக்கங்களுக்கும், சங்கத்தின் அங்கத்தினர் தொகை முதலிய விபரங்களுக்கும் நேரிலோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்திற்கோ கடிதம் எழுதித் தெரிந்துக் கொள்ளுங்கள்.

தலைவர்

**ஸ்ரீ பாரதி சங்கம்**

1/19, ஆலத்தூர் சுப்ரமண்ய ஆச்சாரி தெரு

சூளை, சென்னை.

# ஸ்ரீ பாரதி

(சமய சஞ்சிகை)

## பொருளடக்கம்.



| | | | |
|---|---|---|---|
| 1. | வீரக் கவிஞர் விரும்பும் நாடு | .... | நாமக்கல் கவிஞர் |
| 2. | திருவிளக்கு | .... | பரலி. சு. நெல்லையப்பர் |
| 3. | மறுமலர்ச்சி | .... | "செஞ்சுடர்" |
| 4. | பாரதியாரும் பாரதிதாசனும் | .... | முல்லை முத்து |
| 5. | தமிழ்க் கொடி | .... | "கவிஞர் கம்பதாசன்" |
| 6. | தமிழ்க் காதல் | .... | பூ. கணேசன் B.A.(Hons.) |
| 7. | புரட்சி வீரன் | .... | P. A. நடேசன் |
| 8. | எமனுடன் சம்பாஷணை | .... | A. அய்யாவு B A, L. T. |
| 9. | லெனின் மனைவி | .... | இளங்கோவன் |
| 10. | பாரதியாரின் குரலா? | .... | தொ. மு. மெய்யப்பா |
| 11. | வில்லெனப் பயந்த குருவி | .... | வ. உ. சி. சுப்ரமணியம் |
| 12. | நடிகையின் துரோகம் | .... | உ. வே. ராமசாமி |
| 13. | மக்கள் யார்....மாக்கள் யார்? | .... | தீப்பொறி |
| 14. | அகமே புறம் | .... | இராகுலன் |
| 15. | என் தந்தை | .... | D. ரெத்தினம் |



குறிப்பு:—இவ்வாண்டில் வெளியாக இருக்கும் இதர இருபத்தி மூன்று பிரசுரங்களுக்கு, கட்டுரைகள், கவிதைகள், கதைகள் முதலியன அனுப்ப விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.


**ஸ்ரீ பாரதி சங்கம்**

1/19, ஆலத்தூர் சுப்பிரமண்ய ஆச்சாரி தெரு,

சூளை, சென்னை.

# வீரக் கவிஞர் விரும்பும் நாடு!

மன்னவன் என்ற மனிதனில்லை—அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை
சின்னவர் என்று எவருமில்லை—பட்டம்
தேடிய லைந்திடும் மக்களில்லை

ஊருக்குப் பத்துபேர் நல்லவர்கள்—பொது
யோசனை செய் திடவல்லவர்கள்
யாருக்கும் எதிலும் ஓரங்கள்—செய்யாமல்
அப்பப்போ தீர்ப்புகள் செப்பிடுவர்.

நல்லவர் கெட்டவர் என்ப தெல்லாம்—அங்கே
ராஜாங்கபட்டம் பதவியல்ல
சொல்லில் நடத்தையில் சூரத்தில் தீரத்தில்
சுத்த ரென்று பலர் நத்துவதே.

கச்சேரி என்றொரு கட்டிடமும்—அதைக்
கண்டு நடுங்குதல் அங்கில்லையே
அச்சமில்லாமலே யாரும் பொறுப்புடன்
அங்கங்கே நீதி நடத்திடுவர்.

வீதிக்கு வீதியோர் நீதிஸ்தலம்—பத்து
வீட்டுக்கு அங்கொருபள்ளிக்கூடம்
நீதிக்கு ஓடியலைந்து செலவிட்டு
நிலைகெட்டுப்போகிற நிந்தையில்லை.

பள்ளிப்படிப்புக்குச் சம்பளம்—இன்னும்
பரிட்சைக்குக் கட்டபணமெனவும்
பிள்ளைகள் பந்தாடப்பின்னும் பணமென்று
பிச்சுப் பிடுங்குதல் அங்கில்லையே.

வேலையில்லாதவர் யாருமில்லை—முற்றும்
வீணருக்கங்கே வேலையில்லை.
கூலியில் லாதவர் யாருமில்லை—சும்மா
கும்பிட்டுத் தின்கின்ற கும்பலில்லை.

கூனும் குருடரும் மொண்டி முடங்களும்
கொஞ்சம் : அவருக்கும் பஞ்சமில்லை
தானங் கொடுப்பதென்றில்லாமல்—போது
தர்மமென்றே வைத்துத் தாங்கிடுவோர்.

ஒப்பிமனங்களித் தெல்லாரும்—அங்கே
உண்டு உடுத்துக் களித்திடுவோர்
தப்பிதம்செய்திடத் தோன்றாது—அதன்
தண்டனை தந்திடவேண்டாது.

வாது வழக்குக்கு நேரமில்லை—அங்கே
வஞ்சித்து வாழ முடியாது
சூதுசெய் பந்தயம் ஏதுமில்லை—முற்றும்
சோம்பிச்சுகிக்க வழியுமில்லை.

கள்ளைக் குடிப்பது கூடாது—அங்கே
காமக் கலகங்கள் கண்டதில்லை
கொள்ளை யடித்திடத் தேவையில்லை—என்று
கொஞ்சமும் யாருக்கும் பஞ்சமில்லை.

காவிரி நீர்வற்றிப் போவதில்லை—ஒரு
கால்வாய் மேஸ்திரி எங்குமில்லை
காவலும் கட்டுகேள் ஏதுக்கு எப்போதும்
கள்ளர் பயமென்ற சள்ளையில்லை.

பண்ணையக் காரர்கள் எல்லாரும்—எங்கும்
பட்டினி என்கிற சொல்லேது ?
கண்ணியம் அற்றவர் யாருமில்லை—ஒரு
காலித்தனம் பண்ண ஏலாது.

கண்டதும் கேட்டதும் எப்படிப்—போனாலும்
கச்சேரி வந்து பொய்சொன்னதுமெய்
கண்டவர் உண்மையைச் சொல்லவும் வாய்பொத்திக்
கைகட்டி நின்றிடும் கஷ்டமில்லை.

கொடுத்த பணத்தையும் வாங்குதற்கு—நித்தம்
கோரட்டு வாசலில் காத்திருந்தும்
அடுத்த பிறவிக்குப் போகுமட்டும் நொந்து
அல்லல் அடைகின்ற தொல்லையில்லை.

துக்கத்தைச் சொல்லி அழுவதற்கும்—வெகு
தூரம் நடந்து பிராது சொல்லி
பக்கத்தில் நின்றவர் ஏனென்று கேட்கவும்
பற்றற்றுப் போவதும் சற்றுமில்லை..
தீண்டப்படாதென்று சொன்னாலும்—அங்கே
தீண்டுதல் வேண்டித் திரிவதில்லை.
வேண்டிய சுகங்கள் யாவும் பிறரைப்போல்
வேணமட்டும் உண்டு வேறேதற்கு?

கோயில் குளங்களும் வேணதுண்டு—ஆனால்
கும்பிடப்போவதில் சண்டையில்லை
வாயில் ஜெபதபம் வஞ்சனை நெஞ்சத்தில்
வைத்துப் பிழைத்திட தேவையில்லை.

வட்டிக்குப்போடப் பணமும் இல்லை—அங்கே
வட்டிக்கு வட்டிசெய் சட்டமில்லை
பெட்டிக்குச் சாவியும் இல்லாமல்—வெறும்
பேச்சில் புரண்டிடும் நாணயங்கள்.

தானியம் தவசம் அல்லாமல்—அங்கே
தங்கமும் வெள்ளியும் செல்வமல்ல
நாணயமாற்றென்ற நாடக ஜாலங்கள்
நாகரிகப் பித்தலாட்டமில்லை.

சின்னக்குழந்தைக்குத் தாலிகட்டி—வெகு
சீக்கிரம் தாலி அறுத்தாலும்
வன்னம் கெடுத்தவள் வாழ்வைக் குலைத்திடும்
வண்ட வழக்கங்கள் கண்டதில்லை.

நாட்டுக்குப் பகைவர் யாருமில்லை—பிறர்
நாட்டின்மேல் ஆசையில்லாததனால்
சூட்டுக்குச்சூடும் கொடுத்திடுவோர்—பகை
துஷ்டர் வந்தாலும் துரத்திடுவோர்.

(நாமக்கல் கவிஞர்—*சங்கொலி.*)



# திருவிளக்கு

(பரலி—சு. நெல்லையப்பர்)

ஜோதியே, சுடரே, சூழொளி விளக்கே
யென்று மணிவாசகர் பாடுகிறார்.

தீப மங்கள ஜோதீ நமோ நம
என்று அருணகிரியார் பாடுகிறார்.

நமது முன்னோர்களான பெரியோர்கள் மேலே கண்டவாறு தெய்வத்தைப் பாடியபொழுது நமது தெய்வத் திருவிளக்கையே சிந்தையில் கொண்டிருந்தார்கள். மண்ணெண்ணெய் விளக்கை யல்ல.

திருவிளக்கின்மீது நமது முன்னோருக்கு அளப்பரிய காதல். திருவிளக்கை நமது பெண்களும், அவர்களைப் பின்பற்றி நமது ஆண்களும் நாளடைவில் மறந்தும் துறந்தும் வருவதால்தான் நமது நாட்டில் திருவிளக்கம் குறைந்துவருகிறது போலும்.

நமது மாதர்கள் மாலைப்பொழுதில் திருவிளக்கேற்றி, பூமாலை யிட்டு, தோத்திரம் பாடித் தெய்வம் தொழும் சிறந்த வழக்கம் நாளடைவில் குறைந்தும் மறைந்தும் வருகிறது. மண்ணெண்ணெய் விளக்குவந்து நமது கண்ணையும் மூக்கையும் சுகத்தையும் கருத்தையும் கெடுத்து வருகிறது. அதன் பயனாய், நமது தெய்வத் திருவிளக்கை மறந்துவிட்டோம். திருவிளக்கு நாச்சியாரைத் துறந்து விட்டோம்.

மண்ணெண்ணெய் விளக்கு சுகாதார முறையில் எம தூதன் போன்றது. பொருளாதார முறையில் அதனால் கோடிக் கணக்கான பொருள் நமக்கு நஷ்டம். சமய முறையில்; சாத்திர முறையில் அழகு முறையில் அது பொருத்தமும் அருத்தமும் அற்றது. அரசியல் முறையில் பார்த்தால் மண்ணெண்ணையாலே மண்ணிலே சண்டை.

நமது திருவிளக்கை, நமது பொன்விளக்கை நமது மணி விளக்கை ஏற்றி, அதற்குப் பூமாலையிட்டு, அதனைத் தெய்வமாகக் கருதிப் போற்றுகிறோம். மண்ணெண்ணெய் விளக்கைப் பார்த்

தால் எவருக்கேனும் தெய்வ சிந்தனை உண்டாகிறதா? அதற்குப் பூச்சூட்டி வணங்க முடியுமா? அதனைப் பேய் விளக்கென்றும் 'நோய் விளக்கென்றும்' நமது முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

நமது வெப்ப நாட்டுக்குச் சூடான ஒளிதரும் மண்ணெண்ணெய் விளக்கு பொருந்திய தல்ல. மண்ணெண்ணெய் விளக்கினால் நமது கண்ணும் மூக்கும் சுகமும் கெட்டுப்போகின்றன. இருமல், க்ஷயரோகம், ஆஸ்தமா முதலிய கொடிய (சுவாச) நோய்கள் நமது நாட்டில் பெருகி வருவதற்குக் காரணம் மண்ணெண்ணெய் விளக்கே யாகும். அதனால் விளையும் கேடுகளுக்குக் கணக்கில்லை.

இரண்டு விளக்கெண்ணெய் விளக்கு ஒரு மனிதன் மூச்சு விடுவதால் எவ்வளவு காற்று அசுத்தப் படுமோ அவ்வளவு அசுத்தத்தை உண்டுபண்ணும். ஒரு மண்ணெண்ணெய் விளக்கோ ஏழு மனிதர்கள் சேர்ந்து அசுத்தப்படுத்தக்கூடிய அவ்வளவு காற்றை அசுத்தப்படுத்திவிடும். அப்படியிருந்தும் நமது நகரங்கள் என்ற, நரகங்களில், வீடுகள் எனப்படும் கோழிக்கூடுகளில் வாழும் நமது பேதை மக்கள் செலவு குறையென்பதை மட்டும் கருதிப் புகையை ஏராளமாகக் கக்கும் மண்ணெண்ணெய் விளக்குகளைத் தங்கள் படுக்கை யறைகளிற் வைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் தூங்குகிறார்கள்.

சிறிய குடிசைகளிலும் அறைகளிலும் மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக்கொண்டு, அதன் புகையை இரவெல்லாம் சுவாசித்துக்கொண்டு தூங்கி, விடிந்தவுடன் மூக்குச் சிந்தும்பொழுதும், காறி உமிழும பொழுதும் மண்ணெண்ணெய்ப் புகையைக் கக்கும் எண்ணிறந்த மக்கள் நமது நகரங்களிலும் நாட்டிலும் இருக்கிறார்கள்.

இதனைப் படிப்பவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள மண்ணெண்ணெய் விளக்குகளை யெல்லாம் நாளையத்தினமே உடைத்து எறிந்து விடுவார்களென்று நாம் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு செய்தால் அவர்களுக்குப் புது வாழ்வு ஏற்படும். ஆனால் அதற்கு முதற் படியாக அவர்கள் மண்ணெண்ணெய் விளக்கைச் சிறிது சிறிதாகக் குறைக்கலாம்.

படிக்கும் அறைகளையும், படுக்கையறைகளையும் சமையலறைகளையும் விட்டு, மண்ணெண்ணெய் விளக்குகளை உடனே விலக்கி விடலாம். வீட்டின் வெளிப்புறங்களிலும், வராந்தாக்களிலும், திண்ணைகளிலும், பரந்த இடங்களிலும், அவற்றைத் "தீண்டாத" விளக்காக உபயோகிக்கலாம். ஆனால் மண்ணெண்ணெய் விளக்கை முற்றிலும் விலக்கி விடுவதால், நமக்கு மிகுந்த நன்மை உண்டு,

நெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய் முதலிய நமது எண்ணெய்களால் எரியும் நமது திருவிளக்குகள் குளிர்ச்சியான ஒளியை அளிப்பன. இவற்றில் புகை அதிகமாகக் கிடையாது. இவை காற்றைச் சுத்தப்படுவதுடன், மனத்திற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்கின்றன.

நமது தெய்வத் திருவிளக்கு, அழகுவிளக்கு, மணிவிளக்கு, கிளைவிளக்கு, தேர்விளக்கு, தூண்டாவிளக்கு, தொங்குவிளக்குகளை ஏற்றி வணங்கி, நாமும் நமது மக்களும் புதுவாழ்வு பெறுவோமாக.

நமது திருவிளக்குகளை வெள்ளைக்காரர்கள் போற்றுகிறார்கள், நமது அழகிய திருவிளக்குகளில் பல அன்னிய நாட்டுக் கண்காட்சிசாலைகளை அலங்கரிக்கின்றன. நமது கோயில்களை, கோபுரங்களை, குளங்களை, விக்ரகங்களை, சிற்பங்களைக் கண்டு அன்னியர்கள் வியப்பும் உவப்பும் அடைகிறார்கள் நமது தாமரைப் பூவை நோக்கி, அவர்கள் மகிழ்கிறார்கள். ஆனால் நாம் அழகைக் காணும் கண்களை இழந்துவிட்டோம். அழகற்ற பொருள்களில் 'நமது கண்கள் இன்று அழகைக் காண்கின்றன.

நாம் நமது கண்களைப் புதுப்பிக்க வேண்டும். புதிய கண்கொண்டு, நாம் இந்த உலகத்தையும், அதிலுள்ள பொருள்களையும் கண்டு மகிழவேண்டும்.

மண்ணெண்ணெய் விளக்கால் நமது கண்கெட்டுப் போய்விட்டது; கருத்தும் கெட்டுப்போய்விட்டது, இனி நாம் திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுது, புதுவாழ்வு பெறுவோமாக.

மங்கலத் தங்க விளக்கேற்றும்—நல்ல
மணிவிளக் கொளிசெயும் கிளை விளக்கு
துங்கமான சுடர் விளக்கு நம்
ஜோதி விளக்கை ஏற்றிடுமே.

வருஷம் பலமுறை உடைத்தெறியும்—மண்
எண்ணெய் விளக்கை ஒழித்து விட்டு
வருஷம் நானூறு வாழ்க்கை யுறும் நம்
மங்கல விளக்கை ஏற்று மினே.

திருவிளக்கேற்றித் தெய்வம் தொழும்—நம்
தேசம் உய்யத் தெய்வம் தொழும்;
கருது மாலையும் காலையிலும்—நம்
கனக விளக்கைத் தொழுதிடுமே.



# மறு மலர்ச்சி

"செஞ்சுடர்"

"தனி ஒருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

## அமரத்துவம் அடைந்த கவி சுப்பிரமணிய பாரதியாரின் பொன் மொழிகள்.

இவைகளின் பிரதி பிம்பமே இந்த புஸ்தகத்தை வெளியிடவேண்டிய சாதனக் கருவியாக அமைந்திருக்கிறது. புரட்சிக்கவி பாரதியாரின் புரட்சி அலையே மக்கள் மனத்தில் சூறாவளியை கிளப்பியும், கடல் அலைகளைப்போல் தொடர்ந்து பற்பல புதிய எண்ணங்களைத் தூண்டியும் சமூகத்தின் சகாப்தத்தை மாற்றி அமைக்கக்கூடிய ஒலியையும் எழுப்பி யிருக்கிறது.

கவி பாரதி தன் ஜீவியத்தில் எத்தனையோ கஷ்டமான ஏடுகளைத் திருப்பி விட்டார். தன் குடும்ப வாழ்க்கை, அரசாங்க அடக்கு முறை, போலீஸ் காவல் முதலிய வெளிக் கட்டுப்பாட்டிற்கு அவர் கவனமே செலுத்தவில்லை. ஆனால் மனம் எதையோ நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மறு மலர்ச்சியை நாடிச் சென்ற மனத்திற்கு சட்டம், கட்டுபாடு, தடை எல்லாம் பிரமாதமான விஷயமல்ல. வெளியுலகம், தன் நிலைமை, மக்கள் அவதி, அரசாங்கக் கெடுபிடி. இதற்கு அவர் அறைகூவிக் கதறினது என்ன? அதுதான் மேற்கூறிய வாக்கியங்கள். இதிலிருந்து அவர் ஓர் சாதாரண கவி மட்டும் அல்ல: அரசியல் அறிவுபடைத்த சுதந்திர தேசியகவி என்றே கொள்ளவேண்டும்.

ஏகாதிபத்திய நாடுகள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்ட காலம். உலகமே போர்களமாகி மனிதன் மனிதனைக் கொல்ல நவீன இயந்திரங்களை சிருஷ்டித்துக் கொண்டு வருகிறான். பாமர மக்களின் பரிதாபம் உலகமெங்கும் தொனிக்கிறது. கோடிக் கணக்கான மக்களின் சவங்கள் குண்டு பீரங்கிகளால் சிதறப்பட்டும், பஞ்சம் பசி பட்டினியால் நசுக்குண்டும் போகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான இயக்கங்கள் தலை தூக்குகின்றன. பலமிக்க, பணமிக்க, தேச சக்திகளை, தேசத்தின் ஜீவநாடி

போன்ற அரசியல் லகானைக் (கடிவாளத்தை) கையில் கொண்டுள்ள முரடர்கள் ஜெயம் அடைகின்றனர். உலக மக்கள், உழைப்பாளி வகுப்பினரின் ஜீவசக்தி குறைவது அவர்கள் கண்களுக்குத் தென்படவில்லை. யுத்தத்தில் வலிமைமிக்க ஏகாதிபத்தியங்கள் வெற்றிவிழா கொண்டாடுகின்றனர். இறந்த வீரர்களுக்கு 'கௌரவத்திற்காக' அனுதாபம் காட்டுகின்றனர். பொது ஜனங்கள் கண்களைத் துடைக்க வெகுமதி, பட்டமளிப்பு முதலியவைகளை அளிக்கின்றனர். இரண்டு எழுத்துப் பட்டம் நான்கு எழுத்துக்களாக ஒரு சாரார் பெயர்களுக்குப்பின் அலங்கரிக்கப் படுகின்றன. ஒரு லட்சம் பொன் பத்துகோடியாக ஒருவர் பாங்கியில் சேருகிறது. ஒரு நாட்டிற்குப் பதினைந்து நாடுகள் அடிமையாகின்றன. நாட்டைப் பெரிதாக நினைத்து உயிரைவிட்ட மக்களின் குடும்பங்களில் பசி, பட்டினி, பஞ்சம், நோய், விபசாரம் முதலியவை குடிபுகுகின்றன.

பெரிய தேசங்கள் சேருகின்றன. சர்வதேச சங்கங்கள் ஏற்படுத்துகின்றன. 'திட்டங்கள்' வகுக்கின்றன. யாருக்காக? தங்கள் உரிமையை இன்னும் பலமாகக் காப்பாற்றுவதற்காகத்தான் உலக சமாதான ஒப்பந்தமும் ஏற்படுகின்றது.

இவை எல்லாம் கடந்த யுத்தத்தின் அம்சங்கள். ஆனால் புரட்சி நாடு, தன்னைப் பிரித்துக்கொண்டு புது உலக சிருஷ்டியை ஆரம்பிக்க ஆயத்தமாகிறது.

நம் புரட்சிக்கவி கண்ணுக்கு இந்த நாடகங்கள் தெரியாமலா இருந்தது? கண்கலங்கித் தலையை தூக்கி, கண்களை அகல விழித்துப் பார்த்தார். மனம் விம்மியது. மேற்கூறிய மொழிகள் இந்த விம்மலின் எதிரொலி தான்.

கிராமங்களின் செழிப்புகள் மங்கத்தொடங்கி நகரம்வந்து தொழிற்சாலைகளில் வேலைசெய்து எலும்பும் தோலுமாய்க் கருகி காய்ந்து வெளிவரும் தொழிலாளியை நம் கவி பார்த்திருக்க மாட்டாரா? தெருக்களில் பசி பசி எனக் கதறி அழும் தாயின் மடியில் பாலிற்காக குழந்தை துடிப்பதை கவியின் மனக்கண் அறியாததா. வெயில், பனி, மழையில் உடலில் துணி இல்லாமல், சேற்றில் உழுது, பயிருண்டாக்கி, அன்றாடம்கூழ்குடித்து நெற்கதிரை ஜமீன்தாருக்கு அளந்துகொடுத்து அவர் தயவிற்காகவும் கருணைக்காகவும் ஏங்கி நிற்கும் விவசாயியின் முகத்தை அவர் பார்த்திருக்க மாட்டாரா?

பலர், வயிற்றை இருக்கப்பிடித்து ஆகாரத்தை நோக்கி ஏங்குகையில், 'ஏவ்' என்று ஏப்பமிட்டு சீட்டாட்டம் ஆட சகாக்களை கூப்பிட்டுத் திண்டில் சாய்ந்து வெற்றிலை பாக்கை உமிழ்ந்துகொண்டு கொட்டாவி விடுவது சமூக, பாகுபாட்டில் ஓர் உயர்ந்த கட்டம்தானே! 'ஏழை' திருப்தி மனப்பான்மை உடையவனாக இருக்கவேண்டும். ஏழை செய்துகொடுக்கும் ஜீவியத்தைக் கபளீகாரம் செய்து கொண்டுவரும் மற்றொருவன் ஏழையின் தர்மகர்த்தாவாக இருக்க வேண்டும். பலர் உழைப்பது, சிலர் அனுபவிப்பது. இது தாரதம்மியம் அல்ல! 'நீதி' என்றே அழைக்கப் படுகிறது. இவற்றை ஒட்டியே அதிகாரமும் வகுக்கப்பட்டிருக்கிறது. இதை மீறுவது குற்றம், அப்படியானால் ஒரு சாரார் களிப்பது, மற்றொரு சாரார் துடிப்பது என்றால் உலகம் யாருக்காக? சுக

ஜீவர்களுக்காக மட்டும்தானு? ஏழை அன்பன் ஒருவரும் இல்லையா? அப்படியானுல், ஒரு மனிதனுக்கு ஜெகத்தில் வாழ வழியில்லையானுல், சமூகம் அவனை பட்டினிபோட விரும்பினுல், மனிதனை மனிதன் அடக்கினுல், சமூகத்தை சமூகம் ஒடுக்கப்பார்த்தால், மக்களின் சுதந்திரத்தை அதிகாரம் ஒடுக்க ஆரம்பித்தால் அந்த அதிகாரத்தை உடைத்து எறி, அழித்துவிடு என்பதுதான் கவியின் உள்ளத்தில் தோன்றியப் புயல்காற்று.

ஆம், சமூகவாழ்வில், மனிதனுக்கு மனிதன் தாரதம்மியத்தைக் காட்டின் அதை உடைத்து தவிடுபொடி ஆக்குவதே ஏழை மக்களின் நோக்கம். தனக்கு ஒருவேளை ஆகாரம் இல்லை. உடுக்க உடை யில்லை. இருக்க இடமில்லை. வேலை செய்கிறுன் பயன் இல்லை.

ஆமாம்! உலகத்தை ஒழிக்க வேண்டியதுதான். மக்களுக்கு நன்மைப் பயக்காத உலகம், அஹிம்சையைப் போற்றிச் சாத்வீகத்தைக் கொள் என்று முதலாளிமூட்டைகள் முழங்குகின்றன. தாங்கள் பசியறியாது உண்டு கொழுத்து உறங்குகின்றனர். உடம்பு கனத்து காலால் நடக்க முடியாது வாகனங்களில் வரிசையாகச் செல்கின்றனர். முதலாளிப் பணமூட்டைகள் சொல்வது அஹிம்சை ஆனுல், அவர்களாலே ஏழைமக்களுக்கு உணவு கிடைப்பதில்லை. அதிக விலையை கொடுத்தாவது ஏழைகளின் உணவைப் பிடுங்கிவிடுகின்றனர். பல நூற்றுக் கணக்கான ஏழைகளின் உணவுப் பொருள்கள் பணக்காரன் உண்டதுபோக மீதி அவன் வீட்டு அம்பாரங்களிலே, அறைகளிலே, இரும்புப் பெட்டிகளிலே, பரண்களிலே பலவகை உருவத்துடனே நிரப்பப்பட் டிருக்கின்றன. அப்படி நிரப்பப்பட்டதனுல் நாளடைவிலே ஏழைகள் பட்டினிக்கிடந்து இறப்பதற்கு ஏங்கி, ஏங்கி உயிர் விடுகிறுர்கள். இது யாரால் என்று கேட்கிறேன்? இப்படி மறைமுகமான வழியில் நாட்டையும், நாட்டு மக்களையும் கொஞ்சம் கொஞ்சமாக கொல்லும் இந்தப் பணக்காரக் கூட்டம் சொல்வது என்ன? அஹிம்சை சாத்வீகம், சமத்துவம் என்ற வேதாந்தம். ஏழைகள் எங்கே பசி வெறிகொண்டு தங்களைக் கொல்ல ஆரம்பித்து விடுவார்களோ என்ற பயத்தினுல் அஹிம்சையைக் கைக்கொள்ளுங்கள் என்று அலறுகிறது.

ஆனுல், பாரதியாரோ பாட்டாளி மக்களின் நிலைகண்டு இரத்தக் கண்ணீர் விடுவதுபோலவேதான். "தனி ஒருவனுக் குணவில்லை" என்றுல் அந்த உலகத்தையே ஒழிப்போம் என்றுர்.

ஆனுல் பாரதியார் இறந்துவிட்டார். அவர் வார்த்தைகள் இறந்து போகவில்லை. பெண்மையின் மாண்பு மழுங்கவில்லை. தேசியத்தின் ஜீவநாடி புதைந்து போகவில்லை. கொள்கை, கடமை, வீரம், நேர்மை ஒவ்வொரு சுதந்திர இந்தியனின் மனதிலும் பதிந்துவிட்டது. ஒருவனுடைய ஜீவமரண பிரச்னை அல்ல, சமூகத்தின் - ஏன் - அரசியல் அமைப்பின் புதிய நிர்ணயிப்பை ஒவ்வொரு இந்தியனும் அமைக்க முயன்றுக்கொண் டிருக்கிறுன். பாரதியார் எடுத்துக் காட்டினுர்:— தேசியகட்சிகள் நடைமுறை பாதையை காண்பித்து வருகின்றன. பழைய முறையை அதாவது தனி ஒருவனுக்கு உணவு இல்லை. என்ற முறையை, உடைத்து புதிய சகாப்தத்தை எல்லோருக்கும் உணவு கிடைக்கும் முறையைநடத்த அணி வகுப்போம்.

# பாரதியாரும், பாரதி தாசனும்

"முல்லை—முத்து"

"பாரதியாரின் ஏகப்பிரதிநிதி பாரதி தாசனே" என்கிறது "தினசரி." அதற்கொப்ப அவரது கவிதைகளும் பாரதியாரின் உணர்ச்சி வேகத்துடனும், எந்த விஷயத்தையும் எளிய நடையில் சுருக்கமாக எதிரியின் மனதிற் சுருக்கெனப் பாயும்படியும், எழுத்துக் கெழுத்து தமிழ்மணம் திகழும் படியும் அமைந்திருக்கின்றன.

அதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள்:—

பாரதியார், தன் காதலியான கண்ணம்மாவை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். காதலி அன்றிரவு "தீர்த்தக் கரையினிலே தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே, பார்த்திருந்தால் வருவேன்" என்று சொல்லியதை நினைவுகூர்ந்து வாடுகிறார். காதல் தீ வாட்டுகிறது.

"வார்த்தை தவறிவிட்டாய்—அடி கண்ணம்மா
மார்பு துடிக்கு தடீ!
பார்த்த விடத்தி லெல்லாம் உன்னைப் போலவே
பாவை தெரியு தடீ"

என்று சொல்லி, தன் காதலியின் தவறு எத்தனை துன்பம் தருகிறது என்பதைக் காட்டுகிறார் இன்னும் பாருங்கள் அவர் காதலிக்கப்படும் பாட்டை :—

மேனி கொதிக்குதடீ—தலை சுற்றியே
வேதனை செய்கு தடீ,!

.... .... .... ....

மேலும் அவரின் காதற் பசியைப் பாருங்கள் :—

"கூடிப் பிரியாமலே ஓரிராவெலாம்
கொஞ்சிக் குலவி யங்கே,
ஆடிவிளை யாடியே உன்றன் மேனியை
ஆயிரங் கோடி, முறை
நாடித்தழுவி மனக்குறை தீர்ந்து நான்
நல்ல களி யெய்தியே"

பாடிப் பரவசமாக நினைத்தேன் ஆயினும், நீ ஏமாற்றி விட்டாய் என்று கூறுகிறார். இனிப் பாரதி தாசனின் கவிதையைப் பார்ப்போம்.

" .... .... .... ....

நானின்பம் எய்துவதில் யாருக்குத் துன்பம் ?

சொல்லைத் தேனாக்கி எனை அத்தான் என்றள்ளிச்
சுவைக்கடலில் தள்ள அவள் இன்னும் வர விலையே ! "
என்று ஏக்கம் கொள்கிறார்.

இவர் ஏன் இங்ஙனம் ஏங்குகிறார் ?............. ...............

" சிற்றுளிக்கும் பிளவுபடா வல்இரும்பு போல்வாள்
தேனூற எனைநோக்கி வாய்மலர்ந்து நின்றே
நற்றுளிகள் அமுதமுதாய் நன்கருள் செய்திட்டாள்
நள்ளிரவில் அத்தானே நான் வருவேன் என்றே "

இந்தச் சென்ற நிகழ்ச்சியை நினைந்து, தன் காதலி அன்று சொன்னபடி வருவாள் என எதிர்பார்த்து நிற்கிறார்.

" பொற்றொடியாள் எனைத்தழுவித் தழுவிநனி இன்பம்
புதிதுபுதிதாய் நல்க இன்னும் வரவிலையே "

— — — — —

.... .... .... .... என்றன்

மையலினை நான் பொறுக்க ஒரு வழியும் காணேன் "
இது காதல் மிகுதியாகிக் காத்திருக்கும் காட்சி,

" சேற்றில் செந்தாமரை இரவில் அவள் தோற்றம் "
ஆனால், அவளோ !

" தீயில் எனைக்குளிர் செய்ய இன்னும் வரவிலையே ! "

அவளோ நல்ல அழகி - செந்தாமரை முகத்தாள். ஆனால் நான் காதல் தீயில் கிடக்கின்றேன். இன்னும் அவள் வந்து எனக்குக் குளிர்ச்சி தரவில்லை என்று குறை சொல்லுகிறார்.

மார்பு துடிக்குதடீ, மேனி கோதிக்குதடீ, தலை சுற்றியே வேதனை செய்குதடீ ! என்ற பாரதியாரின் சொற்களை, பாரதி தாசன் " தீயில் எனைக் குளிர்செய்ய " என்ற வாக்கியத்தால் நிறைத்து விடுகிறார்.

இவ்வாறு, பாரதியாரின் பிரதிநிதியாக பாரதி தாசன் விளங்குகிறாறென்றால் தப்பாமோ...........?

# தமிழ்க் கொடி

வில்லின் கொடி யிதுவே—தமிழர்
வீரக் கொடி யிதுவே—வான்
வில்லும் தலை வணங்கும்—சேரர்
வெற்றிக் கொடி யிதுவே!


புலியின் கொடி யிதுவே!—தமிழர்
போரின் கொடி யிதுவே—அம்
புலியும் தலை வணங்கும்—சோழர்
புகழின் கொடி யிதுவே!

மீனின் கொடி யிதுவே!—தமிழர்
மீளிக் கொடி யிதுவே—விண்
மீனும் தலை வணங்கும்—பாண்டிய
மேன்மைக் கொடி யிதுவே!

மலைநிகர் தோள் வலிகொள்—தமிழர்
மகிழ்வுற ஏந்தும் கொடி—இமய
மலையதன் உச்சியிலே—சுடர்போல்
மாட்சி விளைத்தக் கொடி!

அச்சம் துளியு மில்லை—தமிழர்
அந்நியர்க் கடிமை யில்லை—தேவர்
கச்சை கட்டி வரினும்—பறக்கும்
கன்னித் தமிழ்க் கொடியே!

சிறையி லடைத் தாலும்—தமிழர்
செல்வம் பறித் தாலும்—குண்டு
அறைய மடித் தாலும்—இதனை
அன்னை எனக் காப்போம்!



# தமிழ்க் காதல்

பூ. கணேசன், B.A. (Hons.)

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி" என்றார் ஒரு உரையாசிரியர், சேரர், சோழர், பாண்டியரது, வரலாற்றுப் பரம்பரையை வகைப்படுத்த வரும்போது, ஆம், சேர, சோழ, பாண்டிய மரபு அவ்வளவு பழங்காலத்தே ஆகும். அம்மன்னர் பரம்பரை ஆண்ட சமுதாயம் மிகத் தொன்று தொட்டது. பழமைக்குப் பழமையாக விளங்கிய பெருமதிப்பு பழந் தமிழ் மன்னர்க்கே உரியதாகும். இன்று குமரி முனைக்குத் தெற்கே கடலால் சூழப்பட்டுள்ள பெரும் பகுதி ஒரு காலத்தில் பரந்த நிலப்பரப்பாக விளங்கிய தென்பதற்கு தொன்னூல்ச் சான்றோடு நிலநூல்ச் சான்றும் நிலவி வருகிறது. இப்பொழுது வானளாவி நிற்கும் இமயமலைப் பகுதி அன்று கடலுள் சூழ்ந்து கிடந்தது என்று நிலநூல் வல்லுநர் வரம்பு கட்டிக் கூறுகின்றனர். அடுத்தடுத்து வந்த தடுக்க முடியாத கடற்கோள்களின் காரணமாக தென்பகுதி சிறுகச் சிறுக கடலால் வளைக்கப்பட்டதென அறிகிறோம். கடல் கொண்டது போக, எஞ்சி நிற்பதே நமது தென்றமிழ் நாடாம். "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம். உலக மக்கள் தோற்றமே, கடல் கௌவிய அத் தென்னிலப் பகுதியில் தான் என்று சீர்தறக் கல்வியும், செம்மையறிவும், நெறிதிறம்பா ஆராய்ச்சியும், மிக்க வரலாற்று அறிஞர்கள் முடிவு கட்டுகின்றனர். உண்மையும் இதற்கு உறுதியளிக்கிறது. உலக மக்கள் தோற்றம், இக் குமரிக் கண்டத்திலெனின், உலக முதன்மக்கள் தமிழரென்பது பெறப்படுகிறது. குமரி முனைப் பகுதியில் இஞ்ஞான்று உறைவோர் தமிழராகலான், கடற்கோள் தொந்தரை மென்மேலுமேற்பட அக்காலத் தமிழன் வடநோக்கிப் பெயர்ந்தனன். அன்று வடக்கு நோக்கிப் பெயர்ந்து, வடவேங்கடம் தென்குமரியைச் சீரிய எல்லையாகக் கொண்ட தமிழனின் தோன்றல்களே நாம். ஆதி மனிதனின், ஆதித் தமிழனின், தெள்ளிய திராவிடனின் சீரிளஞ் சேய்களே நாம். உலகத்திற்கு வரலாற்றையும், புக

ஷையும், அளித்தது நமது முன்னோரே யென்று கூறும்போது நமக்கு எவ்வளவு இறுமாப்பு எய்துகிறது. உள்ளம் எவ்வளவு உவகையால் உந்துகிறது! குருதி எவ்வளவு குளிர்ச்சி யுறுகிறது!

வரலாற்றை யளித்ததோடு வண்புகழ்த் தமிழன் உலகத்திற்குவளமிக்க நாகரீகத்தையும் அளித்தான். ஆனால் இன்று உலகமக்களின் கண்களுக்கு உயர்ந்த முறையில் காட்சியளிக்கும் உயர்வல்லரசு நாட்டார் அன்று தாரணியறியாது, தழையாடை யுடுத்தி, மாண்பறியாது மரப்பொந்துகளி லுறைந்து, சான்றாண்மையின்றி சருகுகளையுண்டு, மாக்கள் நிலையிலுலவிய நேரத்தில், பண்டைத் தமிழன் பான்மையுடன் விளங்கினான். ஆதி மனிதனுகையால் அறிவுபெற் றுயர்ந்தான். வாழ்க்கையை வளம்பட வகுத்துத் திறம்பட நடத்தவேண்டிய முறையை உலகுக் குணர்த்தினான். நாகரீகம் என்ற அருமைச் சொல்லின் அழகிய கருத்தை அன்புடன் விளக்கித் தென்படக் காட்டினான். அன்றையத்தமிழன் அமைத்துச்சென்ற இலக்கியப் பைஞ்சோலை இறங்கிச் செல்லும் வாய்ப்பினைப் பெற்றோர் துறக்க வின்பத்தையும், தூசாகக் கருதுவர். துறக்கத்தின் உண்மைத் தன்மையிலும் ஐயமேற் கொள்வர். கொண்டவரு முள்ளார்களென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆம்! அத்துணை அருமை பெருமைகள் நம்மை மகிழ்விக்கும் முறையில், பெருமைபடுத்தும் வகையில் ஆணவக் கடலில் அழுத்தி யெழுப்பும் தன்மையில் ஆங்குமிளிறுகின்றன. அக்காலத் தமிழன் அறிவாற்றல், வள்ளன்மை, சான்றாண்மை ஆங்கு படம்பிடித்துக் காட்டப்படுகிறது. தமிழன் பல்கலைப் புலவனாகத் திகழ்ந்திருக்கிறான். பல்துறை வள்ளலாக விளங்கி யிருக்கிறான். உள்ளத் தன்மையை உள்ளவாறே உலகிற் கெடுத்து காட்டும் உயரிய மனப்பாங்கும், உறுதி செயற்பாடும் அவனிடையே மிளிர்ந்தன. அவையனைத்தும் அவன் வகுத்துச்சென்ற இலக்கியச்சோலையில் நடமிடுகின்றன. வாழ்வுக்கு உயர்வு கொடுத்த பெருமை, தமிழனுக்கே உரியது. வாழ்க்கை வாழ்வதற்கே யென்பதை அவனே உலகுக் கெடுத்துணர்த்தினான். அறிவைப் போற்றினான், அறியாமையை வீழ்த்தினான். அறிவு பெற்றது ஆராய்ச்சி செய்யவே என்று போராடி புகழ்மாலை சூடினான். மற்றெந்த இனமும் கடைப்பிடிக்காத, எந்த இனப் புலவரும் எடுத்துக் கூறாத, எவ்வகை மொழியும் பெற்றிராத ஒரு தனிப் பெருஞ்சிறப்பு நந்தமிழ் மொழிக்குண்டு. வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த இணையில் பெருமையை யெய்தியவன் தமிழன். ஏனையோர் எழுத்துக்கமைத்தனர், சொல்லுக் குயர்த்தனர், மொழிக்கு வரைந்தனர். நம தருமைத் தமிழன் எழுத்து, சொல், மொழியோடன்றி பொருளுக்கும், இலக்கணம் யாத்தான். பல்கலைப் புலவன் மட்டுமல்ல. உளநூற்புலவனென்றும் உலகுக் குணர்த்திவிட்டான். பொருளிலக்கணமே, தமிழனின் நாகரீகத்திற்கு அடிப்படையானது. தனக்கொத்த ஏனைய நாட்டு நாகரீகங்களான எகுபதியம், கிரேக்கம், எபிரேயம், ஆகியவை மாண்டொழிய, மங்காது இளமைத் தன்மையின் எழில் பெற்றுத் தமிழ் நாகரீகம் மட்டும் தனிச் சிறப்புடன் மிளிறுவதற்குக் காரணம், இப் பொருளிலக்கணத்தின் வரையறுத்த வாழ்க்கையமைப்புத் திட்டமே.

வாழ்க்கை இரண்டாக்கப் பட்டது. அகவாழ்க்கை, புறவாழ்க்கை யென் பவையே அப்பாகுபாடாம். உள் ளத்தா லுணர்ந்து, பிறர்க்கு எடுத் துக் காட்ட வியலாத முறையில் அமையும், வாழ்க்கைச் செல்வங்க ளெல்லாம் சுகவாழ்க்கையில் அடங் கும். மக்கள் சமுதாயத்தின் பறந்த காதல் வாழ்வு இச்சிறந்த சுகவாழ்க் கைப் பகுப்பிலடங்குமெனக் கூற லாம். புறத்தே நிகழ்வதெல்லாம் புறவாழ்க்கையில் சேரும். காதல் வாழ்வினை யொதுக்கி, ஏனைய மக் கட் கூட்டத்தின் ஒழுகலாறுகள் அனைத்தும் இப் பெரும் பகுதியி லடங்கும். போர், புகழ், வீரம், கொடை முதலிய யாவும் இதனைச் சேர்ந்ததே. கட்டுக்கடங்காதவாழ்க் கைப் பேராற்றை வரையறுத்து வகைப்படுத்திய தமிழனை என் னென்று புகழ்வது? எம் முறையி லெண்ணி, எத்தன்மையில் எத்து வது? ஆண்டவன் அளித்த உடலை: ஆண்டவனுக்கே அர்ப்பணஞ் செய் வோம் என்று வாளாயிராது, வம்பு பேசி, வாது பல நடத்தாது, ஆண் டவனளித்த அரும்பெறல் வாழ்வை அறிவினைக்கொண்டு ஆய்வு பல நடத்தி, பகைவரும் போற்ற பாங் குடன் அமைத்த அன்றையத் தமி ழன் அணிபெறு மறிஞனே, உள் ளத்திற்கு உவகையோடு உயர்தனிச் சிறப்பை ஊட்டக் கூடியவைகள் என்கிறார் ஒரு ஆங்கிலப் புலவர். கள்ளுங், காதலுமென்கிறார் பிறி தொரு புலவர். காதல் மட்டுமே என்கிறான் அறிவாலும் நிரம்பிய அன்றையத் தமிழன், கூறியதோடு மட்டுமின்றி, செயற்பாட்டிலும் அவ னது சிறப்பை யுணர்த்திருக்கிறான். வாழ்க்கையின் செம்பாகத்தைக் காதலுக்கே ஈந்தான். இலக்கியத் தின் பெரும்பாகத்தையும், அதன் சிறப்பையுமுணர்த்தவே பயன்படுத் தினான். இன்பத்திற்கு எல்லை வகுக்க வந்தவன், காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட் டதே இன்பம் என்று சொல்லிப் போந்தான். உண்மை இன்பத்தின் உச்சநிலை அங்குதான் உள்ளது என் பதை உள்ளவாறே எடுத்தோதி னான். காதல் உள்ளத்தில் நிகழக் கூடியது, பிறருக்கு எடுத்துக்காட்ட இயலாதது என்றபோதிலும், அத னது உண்மைத் தன்மையின் உய ரிய கருத்துக்களை, தனது உறை கல்லில் ஒழுங்குபடுத்தி பொன்னெ ழுத்தால் பொறித்தான். அவன் அடுக்கடுக்காக அள்ளி வழங்கிச் சென்றவைகளுள், சிலவே இன்று அகநானூறு என்றும், ஐங்குறுநூறு என்றும், குறுந்தொகை என்றும் காட்சியளிக்கின்றன. காதல் இணக் கத்திற்கு இவ்வளவு இலக்கியமா என்று தோன்றும். ஆம்! இவை மட்டுமல்ல, இன்னும் எண்ணிறந் தவை காலத்திற்கும், கடலுக்கும் ஆட்பட்டன. இவ்விலக்கியங்களுக் கெல்லாம் இலக்கணமாகத் தொல் காப்பியம் மிளிறுகிறது. தமிழனின் பல்கலை யறிவும் பறந்த உள்ளமும் படிப்பவர் மனதைப் பற்றும் வகை யில் தொல்காப்பியம் தோன்றி நிற் கிறது. இலக்கியமின்றேல் இலக் கணமில்லை யென்பது அறிவியல் மொழி. மல்காப்புகழுடைத் தொல் காப்பியத்தை நோக்குமிடத்து; அது தோன்றிய காலத்திற்கு முன் னதாகவே நஞ் செந்தமிழ் நாட்டில் செறிவு பெற்ற பல இலக்கியக் களஞ்சியங்கள் மிளிர்ந்தன வென் பது வெள்ளிடை மலை, ஆயினும் என் செய்ய? அவை யெல்லாம் மறைந்து பட்டன. தொல்காப்பி யத்திற்கு; பின்னர்த் தோன்றிய நூல்களே இன்று நாட்டில் நட மிடுகின்றன. இலக்கியம் வாழ்க் கைப் படமென்ற தன்மையில்

அவைகளின் போக்கைக்கொண்டு பண்டைக்கால தமிழ் மக்களின், வாழ்க்கை முறையினை யறியவாய்ப்பிருக்கிறது. தமிழனின் புறவாழ்வினைப் புறத்தே வைத்து, அக வாழ்வை ஒரு சிறிது அறிய முற்படுவோம். தமிழிலக்கியப் பூங்காவின், தனியொரு மலரின் தருக்கில் பெருமையை ஆய்ந்துணர முயலுகிறோம். கருத்தொருமித்து ஒன்றிய உள்ளம் படைப்பதே காதல் என்பதை முன்னரறிந்தோம். ஒன்றிய உள்ளத்தினருக்கே "காதலர்" என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்படும். உள்ளம் ஒன்றாத நிலையில் உடல் ஒன்றும் தாழ்நிலைக்குக் "காமம்" என்று தனிப் பெயரிட்டு வழங்கப்பட்டது. கருத்து ஒன்றிக் காதல் வளர்ந்து மணங்கூடி மாட்சி வெளிப்படுந் தன்மைக்கு ஒரு எடுத்துக் காட்டினை ஆராய்வோம். அறிவும், திருவும், ஆற்றலும், அழகும் பெற்று மிளிர்ந்த தமிழன் அன்றொரு நாள் மாலை வேளையில் சோலைப்பக்கம் சோர்வு தீர சென்றனன். மாலை மயக்கமும், சோலை இயக்கமும் அவனுக்கு பரவசத்தை ஊட்டின. சோலை மருங்கினில், மணற் குன்றொன்றில் அமர்ந்து இயற்கை அழகின் இணையில், இப்பெருமையை உணர்ந்து மகிழ்ந்தனன். மூங்கில் முனவெடுக்கவும், வண்டுவெங் குழலூதவும், மேகமும் சோலையும் சிறந்த அரங்களிக்கவும், அழகு மயிலொன்று தோகை விரித்தாடி நடனஞ் செய்ய, அறிவு மிக்க குரங்கொன்று அந்நடனத்தில், தன் நாட்டியத்தைச் செலுத்தி நிற்பதைக் கண்டான். வாழ்க்கையில் பெறவேண்டிய பேற்றினைப் பெற்றான். உள்ளம் உவகைக் கடலில் உந்தியெழுகின்ற அவ்வேளையில் ஒரு உருவம் அவன் கண்முன்னர் தோன்றியது. ஒத்த அறிவும், ஒத்த கல்வியும், ஒத்த திருவும் படைத்த ஒரு இளந்தமிழ் நங்கையின் உருவமேயது. அந்நங்கை நந்தலைவனைப் பார்த்தாள். தலைவன் அத்தலைவியைப் பார்த்தான். கண்ணொடு கண்ணோக்கு ஒக்கின் பிறகு கூறவேண்டியது யாது? கருத்தொருமித்து காதல் ஒன்றியது. அவ்வளவு, இருவரும் ஒருவருக்கொருவர் உறவாகி விட்டனர். யாரோ இருவருக்குரிய பிள்ளைகளிவ்விரண்டும், அவ்விருவர் ஒப்புதலின்றி தாங்களே தொடர்பமைத்துக் கொண்டது நமக்கு ஆச்சரியத்தை யூட்டுகிறது. நாகரீகந் திரிந்த காலத்திலுறையும் நமக்கு இது ஆச்சரியத்தையே யூட்டும். அக்காலத்தவரின் அன்றாட வாழ்க்கையில் அடுத்தடுத்து நடக்கும் நிகழ்ச்சி இதுவாகும். ஆகவே இது அவர்களுக்கு ஆச்சரியத்தை யூட்டி யிருக்கமுடியாது. ஆயினும் தந்தலைவன் வாலிபனாகையால் அவனுக்கும் ஓரளவு ஆச்சரியமே தோன்றுகிறது. தன்னை யறியாமலே தலைவியிடத்தில் தங்களது நிலையையெடுத்து விளக்குகிறான். என் தாய் யாரோ! என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையிலும் உறவினரல்லர். யானும் நீயும் இதற்கு முன்பு ஒருவரையொருவர் அறிந்தவரல்லோம். அப்படி இருந்தும் நமக்குள்ளே உள்ள நேயம் உறம்பெற்றெழுந்து விட்டது. செம்புலத்தில் பெய்யப்பட்ட நீர், அப்புல மண்ணின் தன்மையைப் பெற்று, ஒரு நீர்ப்பாங்கை யெய்துதல்போல உனதுள்ளப் பண்பினை யுணர்ந்த என் நெஞ்சம் காலந் தாழ்த்தாது கலப்பினை எற்றது. இதற்கு நாம் குற்றவாளிகளல்லோம். இயற்கையின் தன்மை இணைத்தது நம்மை யென்கின்றான். இக்கருத்துக்கள் பொதிந்த கவினுறும்பாடலைக் காணுவோம்.

# புரட்சி வீரன்

(பெ. அ. நடேசன்)

அவன் புரட்சிமனம் பேனு முனையாக மாறியது. சாதாரண பளபள வென பிரகாசிக்கும் கத்திபோல் இல்லை அவன் பேனு முனை. எல்லா மக்களையும் தட்டி எழுப்பும் சக்தி வாய்ந்தது. அவன் நாளுக்கு நாள் மக்களின் மனதை புரட்சி மயமாக்கினான். மக்களின் முகத்தில் சுதந்திரஜோதி பிரகாசித்தது. அவனுக்கு அரசாங்க உதவியோ அல்லது பண உதவியோ எதுவும் கிடையாது, மக்களின் உதவியே பேருதவியாக இருந்தது. கண்ட கண்ட இடத்தில் நின்றுகொண்டு ஓயாமல் மழை போல் பிரசங்க மழை பொழிவான் அவன் பிரசங்கமேடை அலங்கரித்த மேடையல்ல; சாதாரண பிளாட்பாரம்தான். கூட்டத்துக்கு தலைவனும் அவனே தான். அவன் பேச்சைக் கேட்க ஜனங்கள் இவ்வளவு அவ்வளவு என்று மதிப்பிடமுடியாது. எங்கு நோக்கினும் (மக்கள்) ஜன சமுத்திரம் போல் கூட்டமிருக்கும். அவன் பேசும் பேச்சை சலிப்பில்லாமல் தாய் மார்கள் குழந்தைகளுடன் கால் கடுக்க நின்று கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

அவன் ஒவ்வொருவனுக்கும் சுதந்திரம் தேவையென்றும், உலகத்தில் உள்ள எல்லா இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு உரிமை வேண்டும் என்றும், அசட்டு அசாதாரணச் சட்டப் பிரயோகம் செய்து மக்களை வாயடக்கும் அரசாங்கத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்யவேண்டும் என்றும், என் தாயின் வயிற்றில் வளர்ந்து வரும் "சிசு"வுக்குக்கூட அந்த சமசுதந்திர பங்கு இருக்க

---

(13-ம் பக்கம் தொடர்ச்சி)

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம்தாங் கலந் தனவே."

அழகிய கருத்து அழகாக அமைக்கப்பட்டதற்கு இதைவிடச் சான்று எங்கேனுமுண்டோ? பண்டைப் புலவனின் பொருள் வளனும், சொல் வளனும், இப்பாடலில் காட்சியளிப்பதைக் காண்மின்!

வேண்டும் என்று பேரிடிபோல் முழங்கும் வார்த்தையை ஜனங்கள் கேட்டு ஆவேசம் கொள்ளாமல் இருக்க முடியாது. நமக்குள் சாதிபேத மத விஷயங்களை நினைப்பில் கொள்ளாமல் எல்லோரும் சுதந்திர அக்னியில் மூழ்கவேண்டும், ஒற்றுமை சுதந்திரக் கிளர்ச்சிக்கு மூலமந்திரம் என்று அவன் சொல்லும்போது எல்லோரும் அவரவர்களின் தோளைத் தட்டிக் கொள்வார்கள்.

அவன் வாழ்க்கையே பிரசங்கம். அணுவளவு நேரத்தைக் கூட துஷ்பிரயோகம் செய்யமாட்டான். தன்குடும்ப சிந்தனையை மறந்து சதா புரட்சி சிந்தனையே அவன் உள்ளக் கோயிலில் மோதிக்கொண்டிருக்கும். அல்லும் பகலும் அவன் உழைத்ததை தேசமக்கள் கனவிலும் மறக்கமாட்டார்கள்.

அவனுக்கு இரண்டு குமாரர்களும் ஒரு குமாரத்தியும் உண்டு. எனினும் அவர்களைப்பற்றியே சிந்தனையே செலுத்தமாட்டான். குடும்பத்தில் கலந்து கொள்ளாதவன் போல் தனித்து இருப்பான். தன் மனைவியிடத்திலும் அதிகநேரம் வார்த்தையாடுவது கிடையாது. அந்த அம்மையாரும் தன் கணவன் நெடு நாள் உயிர் வாழ இறைவனை வணங்குவாள்

அவன் கோழைகளை தீரனாக்கினான்—வஞ்சகர்களை மெய்யாளராக மாற்றினான்—சமயவிரோதிகளை அரசாங்கத்தின் விரோதிகளாகவும்—கொள்ளக்காரர்களையும் திருடர்களையும், தன் உண்மைப் புரட்சிக்காரர்களாகவும்—இளம் வாலிபர்களையும்--என்! பச்சிளங் குழந்தையைக்கூட தன் சுதந்திர சூர்யோதயத்தில் திளைக்கும்படி செய்தான். மக்களிடம் ஆவேசம் பொங்கிற்று. எல்லாம் ஒருங்கே சேர்ந்தனர் புரட்சி வாழ்க, புரட்சி வாழ்க என புரட்சி கீதம் பாடி தெருவெலாம் முழங்கினர். தன் சகல சுக துக்கங்களையும் மறந்து சுதந்திரஜ்வாலாக்(கி)னியில் மூழ்கினர்.

அப்போது தான் அரசாங்கம் கண் விழித்தது, தேசமக்களின் ஆவேச உணர்ச்சியை உணர்ந்தது. புரட்சி வீரனுக்கு சாதகம் அளித்த பத்திரிகைகளுக்கு முதன் முதலில் வாய்ப்பூட்டுப் போட்டது. பத்திரிகையை அடக்கி விட்டால் நாட்டின் கொந்தளிப்பு அடங்கிவிடும். மேலும் ஜனங்களை அதிகாரச் சட்டத்தை அவரவர்கள் தலையில் சுமத்தி அடக்கிவிடலாம் என எக்களித்தனர். ஆனால் அரசாங்கத்தினர் நினைத்ததற்கு புறம்பாக நாட்டுமக்கள்

நன்ருக கண் விழிக்கத்தொடங்கினர். மீண்டும் புரட்சி, கலவரம் அதிகரிக்கத்தொடங்கின. புரட்சித் தலைவனை அடக்கினலன்றி ஜனங்களின் கொட்டம் அடங்காது என எண்ணி புரட்சித்தலைவனை தேடி கண்டு பிடிக்க முயன்ருர்கள். எங்கெங்கோ அலைந்தார்கள். பத்திரிகைகளில் அவனை கண்டு பிடித்து சேர்ப்பிப்பவற்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என விளம்பரம் செய்தனர்.

இன்னும் பல முறையான திட்டங்களை வகுத்து அவனை சிறையிலிட்டு சித்ரவதை செய்யத் தீர்மானித்தனர். புரட்சித் தலைவன் அகப்படவில்லை. அரசாங்கத்தார் பயந்தனர். அண்டையில் நெய்யைவைத்துக்கொண்டு தீ இடுவதற்கொப்பாகும் என்று கவலை அடைந்தனர்.

மக்கள் புரட்சித் தலைவன் பிடிபடமாட்டான் என்னும் நம்பிக்கையுடன் இருந்தார்களாயினும், அவன் சிக்கிவிடாதபடி அவரவர்கள் மனமுவத் தெய்வத்தினிடம் முறை இட்டனர். பிரார்த்தனை இலேசல்ல! கொழுந்துவிட்டு எரியும் அன்பின் சிகரமாய் விளங்கிய புரட்சித் தலைவனிடம் காட்டிய மகோன்னத பிரார்த்தனைதான்.

நடுநிசி காரிருள் உலகை கவ்விக்கொண்டு பேய்ச் சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் கூட்டம்கூடி புரட்சித் தலைவனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தன. எந்தநேரமும் அமைதி தாண்டவமாடாத அன்று புள்ளினங்களும்—இயற்கை அன்னையும் உறங்கிவிட்ட நேரம். எங்கும் பூர்ண அமைதியான வேளையில் ரகசிய சபை கூடிற்று. ஏகாதிபத்திய ஆட்சித்தலைவர்கள் வீறிட்டெழுந்தனர் பிரஜைகளிடம் சுதந்திரவிதையை விதித்த கொடியனை விடக்கூடாது; அவன் எங்கு கண்டாலும் உடனே கைது செய்யப்படவேண்டும் என ஒருமுகமாக முடிவு செய்தனர். வெண்ணிலாவும் வெண்கலச் சிரிப்பு சிரித்துக்கொண்டு கார்மேக முகிலை கிழித்துக்கொண்டு வெளியில் வந்தான், ரகசிய சபை கலைந்தது.

சதாநேரமும் ஒய்வு ஒழிச்சலின்றி சுதந்திரப்பணியாகவே பணியாற்றி வந்தான். கண்ணிகள் சூழ்ச்சிக் கயிரை அணிந்து கொண்டு எங்கும் படர்ந்தபடியே காத்திருந்தது ஆனல் அவன் சிக்கவில்லை. "சட்டம் அமுலுக்கு வந்தது. தேசமக்கள் எங்கும் கூடி சுதந்திர பாட்டையோ, அன்று சுதந்திர பேச்சை பேசியோ

கிளர்ச்சி செய்யக்கூடாதெனவும், மீறினல் தண்டனை அடைவார்கள்.''

ஐக்கிய மக்கள் பின் வாங்கவில்லை, சட்டத்தை எதிர்த்தார்கள். சட்டம் வலுக்குமா? காட்டி கொடுக்கும் கபடர்தான் உண்டா? மண் அதிர மக்களின் அதிர்ச்சி வான்முகட்டை எட்டியது. மக்களின் சுதந்திரப் பேச்சை வலிமை இல்லாத, வரண்டுபோன சட்டம் மூலம் அணை போட முடியாமல் தவித்தனர். சர்க்கார்! எவ்வளவு காலம் இருட்டாக இருக்க முடியும். என்றைக்காவது ஒளி வீசியாகத்தான் வேண்டும். மறுபடியும் ரகசிய சபை கூடிற்று. ஏதேதோ விவாதித்தபின் ஐக்கிய மக்கள் பேரில் பெரிய சுமையைச் சுமத்தினர். ''மக்களின் சொத்துப் பறிமுதல்'' சட்டம். இதை கேள்விபட்ட மக்கள் தன்னிரு விழிகளை இழந்தவர் போலானர்கள். நாள் முழுவதும் கண்ணீர் விட்டு கன்னஞ்சிவந்ததைப் பார்ப்பதற்கு கலக்கமாக இருந்தது. அவரவர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார்கள். நிலை கலங்கி நெடும்பனைபோல் காட்சி அளித்தனர். வறுமை—நோய் அவர்கள் எதிரில் கோர நர்த்தனமாடியது. கண்டபலன் அவ்வளவுதான். சட்டம் என்ற பெயரால் மனித சுதந்திரத்தை உறுஞ்சும் கொடிய விலங்கினர் கொம்மாளம் இட்டனர். உண்ண உணவின்றி பட்டினியால் மாண்டவர் பல்லாயிரம். நோயால் பீடிக்கப்பட்டு மற்றும் இறந்தவர் கணக்கிலடங்கா. கோரமான ஆட்சி மிருகவேதனையை விட இன்னும் அதிகரிக்கத் தொடங்கின. மக்கள் வாழ வழி இல்லாமல் திக்குமுக்காடி திண்டாடினர். கொள்ளை அடித்துக் கொண்டுபோன சொத்தைச் சிநேக பாவத்தில் கேட்பது குற்றமா? தன் நாட்டை அடிமைப் படுத்தி மக்களிடம் சகிக்க முடியாத ஆட்சியை நடத்தி சித்ரவதை செய்வதைவிட தாய்நாட்டை ''கொடு'' என்று சுதந்திரக் கனல் எழ கேட்பது குற்றமா? ஈவு இரக்க மில்லாமல் இரும்புக் கம்பிகள் காவல் காக்க அடைத்து வைப்பது குற்ற மில்லையா?

என்ன கேவலமான அடிமை வாழ்க்கை ''மனிதப் பிறவிக்கு சகல உரிமையும் உண்டென்று சொல்லி, காட்டில் வாழும் விலங்கினங்களாகிய எங்களுக்கு, அவ்வித சுதந்திரம் கிடையாதெனக் கூறினீரே மனிதப்பிறவியரே! உங்கள் பாடு எங்கள் தீவிர சுதந்திர வாழ்க்கையைவிட கேவலமாகப் போய்விடவில்லையா? என்று ஆர்ப்பறிக்க அலறித் துடித்து அறை கூவுகின்றது. என்னே? விந்தை ஆம்! கேவலமான அடிமை வாழ்வுதான். சந்தேகமே இல்லை.

ஒரு நாள் காலை சூரியோதயத்திற்குமுன் சுதந்திர புள்ளினங்கள் சுதந்திர இன்னிசை இசைத்துக் கரகோஷம் செய்தன.

அதன தன் சிறு குஞ்சுகூட இறக்கைகளை விரித்தபடியே பறந்தது. ஆம்! சுதந்திரமாகச் செல்லும் சுதந்திரப் பட்சி வர்க்கங்கள்கூட சில சமயங்களில் வேட்டையாடுவோனின் குறியிலும், மற்றும் மனிதனின் ஹிம்ஸையிலும் சிக்கிக் கொள்கிறது.

உலகம் யாருக்காக — இயற்கை யாருக்காக — செழுமை யாருக்காக—மனிதவர்க்கங்கள் யாருக்காக—மிருக இனங்கள் யாருக்காக — கலை—பொருள்—தாவரம் யாருக்காக — பிறவி எடுத்த ஒவ்வொரு உயிருக்காக வல்லவா? மேற்கண்டவற்றை ஒரு சமூகத்தார் மட்டுமா அல்லது ஒரு மதத்தினர் மட்டுமா? ஏகாதிபத்திய நாட்டினர் மட்டும் அனுபவிக்கவா? எல்லோரும் பூவுலகில் பிறந்து சுதந்திரமாக வாழ வழி இல்லாமல் அடக்கு முறை போட்டிருக்கும் விந்தைதான் என்ன? யார் ஆள்வது? யார் மாள்வது?

சமீபத்தில் ஏற்பட்ட நாகரீக வளர்ச்சியில் விஞ்ஞான உருவில் முதிர்ந்த யுத்தக் கருவிகள்தான் என்னே! மக்களை உய் வித்தவன் ஒருவன். வளர்ப்பவன் ஒருவன். வளர்ந்தவன் ஒருவன் அவனும் மனிதன்தான். புதிய புதிய யுத்தக்கருவிகள் நாளடை வில் மனிதனால் உண்டாக்கப்பட்டு அழகான மாளிகைகளையும், மண்டபங்களையும் — நாடு நகரங்களையும் — செழித்தோங்கும் இயற்கை வனப்புகளையும்—சிறு ஜீவன் முதல் விஷக்கிருமிகளான யுத்தக் கருவிகள் புதிய போர் சாதனத்தோடு கொல்லவந்த கொடிய மனிதக் கூட்டம். ஐயோ! மனித வளர்ச்சியில் என்ன கொடூரமான திருவிளையாடல் இவற்றை யெல்லாம் சொல்லோ வியத்தில் போக்க வந்த புரட்சித்தலைவனும் பிடிபட்டான். துயில் நீங்கிய பிறகே உலக மக்கள் காதில் விழுந்தது. ஏற்கனவே அன்ன ஆகாரமில்லாமல் பசிபட்டினியால் வாடும் மக்கள் புரட்சித் தலைவன் செய்தியைக் கேட்டவுடன் மரம்போல் மடிந்து சாய்ந் தார்கள். தன்னிரு காதுகளையும் துக்ககரமான செய்தியை உள் நுழைய விடாதபடி காதைப் பொத்திக் கொண்டார்கள். கண் களில் கண்ணீரும், உள்ளத்தில் பயங்கர கவலையும் குடிகொண்டது அன்று நாடு முழுவதும் துக்கச் சாயல் பரவியது.

புரட்சித்தலைவன் என்ன நேர்ந்தாலும் அசைபவனல்ல எதிர்த்தே தீரமாகச் செல்லக் கூடியவன். சமய சந்தர்ப்பத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் பரதேசியல்ல; தாய்நாட்டு விடு தலைக்காக உயிரை அர்ப்பணிக்கிறேன் என்று வயிரை வளர்ப்பவ னல்ல. அவன் இதய துடிப்பு விலையுயர்ந்தது. மதிக்க முடியா தது. அவன் மனோஉறுதி வார்த்தை அவனை விட்டு மீளமுடியாத படி சுற்றுப்புற அகழி படைத்திருந்தான்,

மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் முடிவை எதிர்நோக்கி இருந்தனர். அவன் மனைவியும் யமனிடத்தில் போர் செய்து கொண்டே மரணப் படுக்கையில் கிடந்தாள். புரட்சித் தலைவன் அரசாங்கத்தாரிடம் பிடிபட்டது முதல் இன்னும் மரணவேதனை அவளை வாட்டியது ஏதேதோ பிதற்றிக் கொண்டும் தன் கண வனை நினைத்து அழுதுகொண்டு மிருந்தாள். பாவம்! அவளும் அபலையானாள்.

புரட்சித்தலைவன் மீது ராஜத்துரோக குற்றம் சாட்டப்பட்டு அவனை நையப் புடைத்தார்கள். மனங்கலங்காத வீரன் தன் மனைவிக்காக மனம் கலங்கினான். அரசாங்கத்தார் செய்த அட்ட காஸ ஹிம்ஸை அப்பப்பா...................சொல்ல முடியாது.

காலம் வெகு விரைவாகவும் நாள் அதைவிட துரிதமாகவும் செல்ல, புரட்சித் தலைவன் வழக்கும் கிட்ட நெருங்க ஆரம்பித்தன. அவன் இரும்பு கம்பிகளின் தோழனாக மாறி தன் அகண்ட அகி லத்தை தன் முன் நிறுத்தி உலக மக்களுக்கு ஆவேசத்தை ஊட் டிக்கொண் டிருந்தான். தன் மனைவிக்கும் ஆறுதலான உபதேசம் செய்து அவளை வியாதியிலிருந்து விலக்க முயன்றான். அவன் பரந்த சாகரத்தையும், நீல வானத்தையும், சாகரத்தின் சதுரங்க லீலைகளையும் மக்களின் சுபிட்சத்தையும் மறந்தான். அவன் கண் கள் இங்குமங்கும் செல்லாதபடி புருவங்கள் அவனை பாதுகாத்தது.

சிறை அறையில் புரட்சித் தலைவன் நடமாடிக்கொண் டிருந் தான். அவன் தலை மேல்நோக்கியபடி இல்லை. கம்பீரத் தோற் றம் அவனை குன்ற வைத்தது. இடிவிழுந்த கண்களோடு மௌனம் சாதித்துக்கொண் டிருந்தான். யாரோ ஒரு அதிகாரி உள் நுழைவதைக்கண்ட தலைவன் "ஐயா, களைப்பாக இருக்கிறது. உண்டு நாள் பலவாகியும் மனிதன்போலத் தான் இருக்கிறேன். ஆனால் உள்ளுக்குள் கிருமி என் உடலை தின்று வாழ்கின்றது. இங்குள்ள சிறை வார்டர்களை கேட்டால் பதிலே சொல்லாமல் போய்விடுகிறார்கள். இன்னும் இரண்டொரு நாளிருந்தால்........ ................................போவேன். அப்பொழுது உங்கள் முன் குற்றம் சாட்டப்படலாம்? என்று சொல்லுமுன்பே, மிஸ்டர் இதோ பார் இக்கடிதத்தை என்றான் அதிகாரி. அதிகாரியின் குரல் அவனை வெலவெலக்கச் செய்தது. 'என்ன?' என்று கேட் டுக்கொண்டே கடிதத்தை வாங்கி பிரித்துப் பார்த்தான். "நீ செய்த சதிக்குற்றம் உனக்கு தூக்கு தண்டனை விதித்திருக்கிறது. இந்த தேதிக்குள் உன்னை சந்திக்க உன் பந்துக்கள் வருவார்கள். நீ இதை தெரிந்துக்கொள்ளவும்"....என்ற கடிதத்தை வாசித்து முடித்ததும் கண்கள் சிவக்க அக்கடிதத்தை கசக்கி தூர எரிந் தான். சிறை அதிகாரியை வாயில் வந்தபடி திட்டினான்.

# எமனுடன் சம்பாஷணை!

(அ. அய்யாவு, B. A., L. T.)

காலதேவதைக் கோயிலிலே அண்டக்
கலசம் என்பதோர் கம்மியன் கைத்திறன்;
மேலதான விலையிலா மணிகளை
மேற்பரப்பினில் பதித்து வைத் திட்டனன்.
நாலு திக்கிலும் வாயில்களாங்கதில்
நான் நுழைந்தோரு அதிசயம் கண்டேன்
காலனென்றொரு கறுப்பன் முன்னோடி
கையிலே மரண வாளோடு நின்றனன்.

இருவினைச் சங்கிலி பூட்டிய மாயை
எருமையும் ஓர்புறம் இருந்ததவன்பால்
"உருவின வாளோடும் நின்றது ஏனோ?
உரைத்திடல் வேண்டும்" என்றிட என்னைத்
துருவின கண்ணொடு பார்த்திவை சொல்வான்
"துணித்திடல் அதுவே தொழில்எனக்கொண்டேன்;
மருவின காளிதேவியின் ஆணை,
மயிரிழைகூடத் தவறுவ தில்லை".

"அழித்தலே தொழில் என்று புகன்றனை!
அக் கலசத்தையும் அழித்திடவல்லையோ?
பழித்த செய்கை செய்வதிலுள்ளதோர்
பாவ புண்ணியம் ஓர்ந்திலைபோலும் நீ
சுழித்த சூறைத் துரும்பென உயிர்களைத்
தூக்கி நின்றனை; ஆக்கமோ? என்றிட
விழித்த பார்வையில் வெந்தணல் சிந்திட
வேதண்டு காவலன் வெய்யுரைசெய்துவான்.

"யாரிடம் உந்தன் அகந்தையைக் காட்டுறாய்?
அம்மை காளி(இம்)எனும் அக்கணம்
ஓரிடமும் மிலா தொழிந்திட வாளினை"
ஓச்சும் அக்கணம் ஒன்றெனத் தேர்துவாய்

---

(முன் பக்கம் தொடர்ச்சி)

புரட்சித் தலைவன் பலவாறாக நசுக்கப்பட்டு, தன் வீடு வாசலை யும் மறந்து, சுற்றத்தார் இன்னும் அநேக நண்பர்களையும் உலக மக்களின் நெஞ்சில் வேகும் வறுமையையும் முதுகெலும்பு ஒடிய உழைக்கும் பாட்டாளி மக்களின் துயரத்தையும் வருங்கால இளஞ் சிரார்களின் மனத்துணிவையும் நினைத்து சிறிதுநேரம் மௌனம் சாதித்தான். "சுதந்திர மணி" அவன் இதயத்தை தாக்க உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் மறந்தான்.

காரிருள் மேனியன் கனன்றுரை செய்யவே
"கருத்துரை தா" எனப் பொறுத்துரை சொல்லுவான்
"நேர்படு காளியின் நெறிசெலா யாவையும்
நிக்ரகம் செய்குவேன்; அக்ரமம் இல்லைகாண்".
"நெறியிலார் தம்முயிர்ப் பறியெலாம் செய்வையேல்
நெறியெனக் கெதுவென நிகழ்த்திட வேண்டுவேன்.
வெறியிலா மொழியினில் விளம்புக" என்றிட
"வெல்க ஓம் காளியின் ஆணையும் வெல்கவே
அறிகிலார் அவள்அறம் அமரரும் அசுரரும்
யாவையும் படைத்துப்"பொது"என வைத்தனள்
பொறியிலாச் சுயநலப் புல்லியர் அவனியில்
பொருளெலாம் தமதெனும் மருளிலே மாய்ந்தனர்"
"பஞ்சபூதங்களின் சேர்க்கையால் போகப்
பயிரை மானிடன் மதியினால் உழைப்பினால்
எஞ்சலின்றித் துய்த்துயிர் வாழ்ந்திடல்
என்ற நன்னெறி காளியின் ஆணையாம்.
வஞ்சகம், பொய், சூது வலிமையால்
மக்களில் சிலர் மாக்களாய் மாறியே
நெஞ்சில் ஈரப் பசையிலா நீசராய்
நினைப்பிலும் தேவியின் நெறியினைத்தேர்கிலார்"
ஆசைப்பேயின் அடிமையர் எழுகடல்
ஆணைசெல்ல விழைகுவார் செல்லாக்
காசைப்பேணும் உலோபியர் தீயலோ
காதயர் காதகர் பாதகர் கல்மன
வேசையன்ன வீணர் அறமெலாம்
வெந்து சாம்பலாய் விட்டசுயநல
நாசகாலக் கும்பலாய் வாழுவார்
நச்சுப் பொய்கை யெனு மனத்துச்சரோ."
ஏழைய ருழைப்பபோ டிரத்தமுறிஞ்சுவார்
"எல்லாம் நமக்கே" எனும் பெருந் திமிங்கிலப்
பேழை வயிற்றினர், உடைமையைப் 'பொது' எனில்
பித்துக்கொள்ளிப் பேயாய் பிதற்றுவார்
பிழைநோயைப் பெருக்கிட முந்துவார்
பிறரும் வாழ்வகைப் பெருநெறி நிற்றிலார்
ஊழைக்காட்டித் தேவியின் ஆணையை
ஓர்பொழுதுங் கடைப் பிடித்திடார் உலகிலே."
"அன்னவர்தம்மை அழித்திடும் தொழிலே
அம்மை காளியின் ஆணையாய்க் கொண்டுளேன்
மன்னிய உடைமை எலாம்பொது உடைமையாய்
மருவி வாழ்ந்திடில் மன்பதை வாழுமே.
இன்னல் தீர்நெறி இந்நெறி நன்னெறி
என்று தேர்கிலாச் சண்டரின் சண்டன் யான்
சொன்ன இவ்வுரை சூழுரை அன்றுகாண்
சுருதியின் உரை! அறிதியோ! அறிதியோ!

# லெனின் மனைவி

"இளங்கோவன்"

வாழ்க்கையில் எல்லோருக்கும் சரியான மனைவி கிடைப்பதில்லை, மனைவிக்குரிய கடமைகளை மறந்த நாரீமணிகள்தான் 99-சதவிகிதம், நடமாடும் தெய்வங்களாய் இன்று காட்சியளிப்போர். இன்றைய கலியாண முறையிலும், காதலிலும், நம்பிக்கைக்குக் கொஞ்சமும் இடமில்லை. முன்னையது அர்த்தமற்ற சடங்கு, பின்னையது உள்ளத்தோடு ஒன்றிக் கலவாத உறவு. இதுதான் சமுதாய முறையில் நாம் காணும் காட்சி, இன்றைய பெண்களின் மனோபாவத்திலும், நோக்கத்திலும், உண்மைக்கு இடமேஇல்லை. ஜாலவேடிக்கைக்காரனுக்கும், இவர்களுக்கும், கொஞ்சமும் வித்தியாசமே தெரியவில்லை. இவ்வளவு மோசமான நிலைமையில் இருந்தாலும்கூட, காட்டு ரோஜாவைப் போல், அத்திபூத்த கதையில் பெண்மைநலம் கனிந்த நல்லார்கள், சிலர் இருக்கவே செய்கின்றனர். இவர்களைத்தான் தாய்மைக்கு, இலக்கானவர்கள் என்று சொல்லுவது இவர்கள்தான், ஒரு நாட்டிற்குப் புதிய விழிப்புத்தருபவர்கள், பெண்மையைப் போற்றலாம் என்று அறிஞர்கள் சொல்வதெல்லாம் இதைக் குறித்தே என்பது தெளிவு. பெண்கள் சக்தி, படைத்தவர்களென்பதில் சந்தேகமே இல்லை. அப்படி இல்லாவிட்டால், மணிமுடி அணிந்த மன்னர்களைப் பிடி சாம்பலாக்குவதும், ஆண்மையைச் சவாலுக்கு அழைப்பதுவும் முடியக்கூடிய காரியமா? பிரம்மச்சாரி சிங்கம்; கலியாணயத்திற்கு நிச்சயிக்கப்பட்டவுடன் மயில்; கலியாணமானவுடன் கழுதையாகி விடுகிறான். என்பது முற்றும் உண்மை. ஆண்மகன் கழுதையாக மாறுவதென்பது ஆச்சரியமே! கொடும் சூரிகளை பெண்மைத் தோற்றத்தில், பேய் உருக்கொண்டு அலையும் நயவஞ்சகக் காரிகளைக் கலியாணம் செய்துகொள்ளுகிறவன், கழுதையாக மட்டுந்தான் ஆவானா? அதைவிட மோசமான நிலைமைக்கும், அவன் இழுத்துச் செல்லப்படுவான். ஐயோ! பாவம், நாம் மந்திரவாதிகளாய் இல்லாத வரையில், பெண்களின் சூட்சி நிலையை, அறிவதென்பது மிகக் கடினம்.

இன்றைய உலகப்பேரறிஞர்கள் சரித்திரத்தில், அவர்களது மனைவிமார்கள் இடம் பெற்றதாகவே இல்லை. காரணம் வெளிப்படையானது, நல்ல மனைவியர்களாக இருந்தால்; அறிஞர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு நியாயம் வழங்கத்தவறி இருக்க மாட்டார்கள். அறிஞர்கள் வாழ்க்கையில், இலட்சிய வாதியின் புதுப் பாதையில் நேர்மையான காதலிமார்கள் இல்லை நெருக்குமாறான மனைவிமார்கள்தான் கிடைத்திருக்கின்றனர். அறியாமைக்கும், மூடப் பழக்கவழக்கத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க நினைத்து, அதன்காரணமாய் விஷம் கொடுக்கப்பட்டு வீர மரணம் எய்தியவர், "சர்கரடீஸ்" என்பது சரித்திரம் அறிந்த மாணவர்களுக்குத் தெரியும், உலகம் போற்றும் அந்த

அறிஞர், தம் தோழர்களோடு உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவருடைய மனைவியார், வெந்நீரைக் கொண்டுவந்து அவர் தலையில் கொட்டினார். அதற்கு சாக்ரடீஸ், "இடி இடித்தது மழை கொட்டியது" என்று சாவகாசமாய், உடன் இருந்த நண்பர்களுக்குத் தெரிவித்தாராம், இடி இடித்தது என்ற சொல்லில் மனைவியின் கோர தாண்டவச்செயல் படம் பிடிக்கப்பட்டு இருக்கிறது, அறிவுடையோர் காண்க! ஆங்கிலக் கவிஞரான "பைரன்" உலக மகாக் கவி, புரட்சி உலகத்தின், தலை போன்றுநிற்கும் அவருடைய மேதாவிலாசத்தை உலகம்போற்றி வணங்குகிறது. ஆனால் அவரது பெருமையை, அவர்மனைவி உணரவில்லை. உணராத நிலையில் மட்டுமல்ல, அவரோடு ஒத்துப்போகவும், மறுத்துவிட்டார். அதுமட்டுமோ? அவரைப் பற்றி அவதூறாகவும் பேசத் தலைப்பட்டார். இது மனைவி கணவனுக்குச் செய்யும் உதவி, நன்றாக இருக்கிறது வேடிக்கை!

மாஜி அமெரிக்கக் குடியரசுத் தலைவரொருவர் காரியாலய வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டிற்கு நேரே திரும்புவதில்லை, காரணம் இல்லத்து ராணியின் கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து கடற்கரையில் மாலைப் பொழுதைப் போக்கிவிட்டு, இரவு வீட்டுக்குத் திரும்புவது வழக்கமாம். அன்பின் எல்லையில் நிற்க விரும்பிய பொருள்கள்; கொடுமையின் உருவமாய் விளங்கினால், தாம்பத்திய வாழ்க்கையில் என்ன ஏற்படும் என்பதற்கு ஜோதிடமா கேட்கவேண்டும்? அதற்கு நித்திய வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களே சாட்சியம்.

ப்ரௌனிங் என்ற ஆங்கிலக் கவியைப்பற்றி அறியாதார், இலக்கிய மாணவர்களில் இருக்க முடியாது, கவியின்மனைவி அழகுநிறைந்தவர், ஆனால், விசுவாச மற்றவர், பெண்மைக்கு அத்தாட்சி போலும்! வாஷிங்டன் இர்விங் என்ற பெயர் பெற்ற கதாசிரியன் ஒரு நாவல் எழுதி யிருக்கிறான், அதில் கதாநாயகன் ஒரு அறிஞன் அவனுக்குக் கிடைத்த மனைவி ஹாரகாளி. இரவில் மனைவி தூங்கிய பிறகுதான் உற்றகாளியின் வீட்டிற்கு வருவானும் அவ் வறிஞன் ஐயோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

நம் முன்னோர்கள் பெண்களைப் பற்றி இழுத்துச் சொன்ன கருத்து, நம் மனதிற்கு ஒவ்வாததாய் இருக்கலாம் 'ஆனால்' வாழ்க்கையில், தாங்கள் சொந்த அனுபவத்தில், நடந்த உண்மைகளையேதான் சொன்னார்கள். இது உண்மைப் பெண்மையின் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுவதில், ஒப்புயர்வற்ற மனோதத்துவ நிபுணர்கள் என்று அவர்களைச் சொல்லமுடியும். உலகத்தின் ஏனைய நாடுகளின் பழைய சரித்திரங்க ளெல்லாம் நம்மவர் கூற்றை மெய்ப்பித்து நிற்கின்றது. அதாவது பழைய நாகரீக நாடுகள் என்று சொல்லப்படுகிற அத்தனை நாடுகளிலும், பெண்களின் போக்கிரித்தனத்திற்கு முத்தாய்ப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. இது புதுமையல்ல; அனுபவமும், வாழ்க்கையும் எல்லோருக்கும் பொதுவானது.

வாழ்க்கையின் போராட்டத்தில், மனைவிமார்களோடு சேர்ந்து ஒத்துப்போக நினைத்த அறிஞர்கள் விஷயத்திலேதான் கருணையும் மனித உணர்ச்சியும் உள்ள மனைவிமார்கள் கிடைத்தார்கள் என்பதை அன்பர்கள் மறந்துவிடக் கூடாது,

பெண்களை ஏமாற்ற நினைத்து, அவர்களை சதியுள்ள நிலையில் தள்ளுகிறவர்கள் விஷயத்தில் மனைவிமார்கள் தவருக நடந்து இருந்தால் அவர்களை நாம் குறைகூறுவதற்கில்லை. ஆனல், நாம் காட்டிய சம்பவங்கள் அதற்கு நேர்மாருனவை. உலகத்தில் நூற்றுக்குதொண்ணூற்ருென்பது பெயருடைய குடும்ப வாழ்க்கை, உப்பின்றி சப்பென இருக்கும். உரமற்ற வாழ்க்கை ''இருக்கின்ருேம்; சாகவில்லை'' என்று சொல்லுகிறநிலையில், சற்று ஏறுக்குமாருக நடப்பாளாகில் கூருமல்.........என்று பேரறிஞர் வேதநாயகம் பிள்ளையின் அமுதவாக்கு, அடிப்படைக் கருத்தைத் தெரிவிப்பது. கஷ்டம் எல்லாமே உண்மையைக்கண்டுபிடிப்பதிலேயே அடங்கியிருக்கிறது. பெண்களின் விபரீத விளையாட்டை இலக்கியங்களில் தந்துள்ள, தாமஸ்; ஹார்டி, டர்ஜிஞேவ் கண்டேல்க்கார், செகோவ், டால்ஸ்டாய், தாகூர்போன்ற சிறந்த ஆசிரியர்கள் உயிரோவியமாய்த் தீட்டியுள்ளனர். பெண்களின் மனஆழத்தைக் கண்டுபிடிப்பதென்பது சாத்தியமில்லை. விஞ்ஞானிகள் அறிவுக்கு எட்டாதது, முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடித்து, புத்துலகத்தை நிறுவியதோழர் ''லெனின்'' மனைவி உலகத்திற்கொரு உதாரணம் இவ்வம்மையாரின் பெயர்.

கிராப்ட்ஸ் கயா என்பது. உபாத்தியாயினித் தொழில் பார்த்தவர். கொமேமையும், கடுமையும் வாய்ந்த லெனின் வாழ்க்கையில் ஒன்றி, உதவிபுரிந்த வீராங்கனை. லெனினைப் பார்க்காமலே, அவரது புத்தி விலாசத்தையும், பரந்த நோக்கத்தையும், மன உழைப்பின் திட்பத்தையும் இன்னேரன்னபிற நற்குணங்களைக் கேட்டுக் காதல் கொண்டாள். உயிரைப் பந்தயம் வைத்து ஆடிய, புரட்சி வாழ்க்கையில், விவாகத்திற்கு முன்னும் பின்னும் ஒத்த மனத்தராய், ஒரே கருத்துடையராய், இருந்து போனவர்கள். இலட்சிய வாழ்க்கையில் நம்பிக்கை உள்ள தம்பதிகளுக்கு லெனின், கிராப்ட்ஸ்கயா குடும்ப வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டு.

சிறைவாசத்திலிருந்து சகல துன்பங்களையும் முணு முணுக்காமல், தட்டிக்கழிக்காமல் சகிப்புத் தன்மையோடு ஏற்றுக் கொண்டவர். சோதனை நேரத்தில் நம்பிக்கைத் தரும் முறையில் பரீட்சை கொடுத்தவர். ஒரே வார்த்தையில் சொன்ஞல் சரியான மனைவி, சரியான புருடன். லெனினைப்பற்றி கிராப்ட்ஸ்கயா, ''லெனின் நினைவுகள்'' என்று ஒரு அரிய புத்தகம் எழுதி யிருக்கின்ருர். அதன் அருமையை என்னவென்பது! உலகத்திற்கு லெனினை அறிமுகப் படுத்தியிருக்கும் முறையே ஒரு புதுமையானது. இந்தப் புத்தகத்திஞல் அழியாத புகழை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டாள் கிராப்ட்ஸ் கயா.

**" காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்**
**காரியம் யாவினுங் கைகொடுத்து**
**மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி "**

.........என்ற பாரதியின் வாக்கை முன்னரே மெய்பித்துக் காட்டின பெண்மக்கள் பலருள் லெனின் மனைவியும் ஒருவள்.

லெனிஞேடு நெடுந்தூரப் பிரயாணம் செய்த யாத்ரீகர்; உண்மையான வாழ்க்கைத்துணைவி கிராப்ட்ஸ்கயாவைப் போற்றியது போலவே நாமும் அவரைப் போற்றுவோமாக.

"ஸ்ரீ பாரதி"
உதவி ஆசிரியர்:
தொ. மு.
மெய்யப்பன்

# பாரதியாரின் குரலா?

## ..................ஐயனென்ற காலமும் போச்சே!

ஆம்! அமரகவி என்று உலகமே, குறிப்பாக நற்தமிழ் நாடு முற்றும் போற்றப்படும் சுப்ரமணிய பாரதியார் சொன்ன வாக்கு. ஆமாம்! ஒரு காலத்திலே ஆரியம் நம்மை அடக்கி தமிழர்களின், பண்பையும் நாகரீகத்தையும், கலையையும், சீரழித்து, ஆட்சி செலுத்தியதும் உண்மைதான்: ஆயினும் ஒரு குறிப்பிட்ட காலவரையறையின்றி பிறப்புக்கு முன்னிருந்து இறப்புக்குப் பின் வரை. ஒரு குழந்தை பிறந்ததென்று வைத்துக் கொள்வோம்: ஆம்! எல்லோராலும் வரவேற்கப்பட்டு இனத்தாரால் ஏக்கத்துடனும், தாய் தந்தையால் எப்பொழுது பிறப்பானோ எந்தன் குலவிளக்கு, எங்கள் வாழ்க்கையின் இருளை அகற்றி, உலகம் அறிய ஒளியால் விளங்க வைக்க என்று எண்ணிய அக்குழந்தையுடன் தீண்டலும் பிறந்துவிட்டது—நம் கண்ணுக்குப் புலப்படாத தன்மையிலே—சுகாதார வழியில் இல்லை ஐயா!—ஆத்மார்த்த புராண இதிகாச, கற்பனை வழிகளில். அங்கே ஒரு ஐயர் தேவை, மாட்டு நீரைவீட்டில் தெளிக்க, எவ்வளவோ மேல் நாட்டு வைத்திய முறையையும், நம் நாட்டு வைத்திய முறையையும் கற்றுணர்ந்த டாக்டர் குருசாமிகள் (ரெங்காச்சாரிகள் அல்ல), நிறைந்த இந்த இருபதாம் நூற்றாண்டிலே கூட, பெனுயில் முதலிய சுகாதார வழிகளுக்கு உரிய மருந்துகள் இல்லாமலா போய்விட்டன. பெனுயில் கிடைக்காத கிராமத்திலே "வீரம்" வாங்காமலா இருக்கிறோம். சரி, பிள்ளையாண்டானுக்குப் பெயர் வைப்பு, அதையும் ஐயராலேதான். பின்பு பள்ளிக்கூடத்தில் பயில வைப்பதற்கு ஒரு ஐயர் முதலில் ஓலைச்சுவடியையோ, அல்லது புத்தகத்தையோ கையிலெடுத்துக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. படிப்பு முடிந்து பக்குவம் பெற்றபின் விவாகம். அங்கேயும் ஐயர், ஐயர் மந்திரம் சொல்லிமுடித்தால் மட்டும், மணமகளை விட்டு மணமகன் பிரியாமலும், மணமகனை விட்டு மணமகள் பிரியாமலுமா இருக்கப்போகிறார்கள். ஒருவரை ஒருவர் மட்டுமல்ல, இவ்வுலகத்தை விட்டே பிரிந்துவிடுகிறார்கள். புரோகிதர் வீட்டில்தான் மொட்டைச்சிகள் அதிகம். இறந்தபின்னும் கூட தாய், தந்தையர்களுக்கு மகனால், ஐயரின் வாயாகிய தபால் பெட்டியின் உதவியால் மோட்ச லோகத்திற்கு காய்கறியிலிருந்து, கோதானம், பூதானம், வஸ்திரதானம் வரையில், இந்த மூட நம்பிக்கைகள் ஒழிந்து எல்லா மக்களும், பகுத்தறிவு உள்ளவர்களாக வாழவேண்டு மென்று கருதித்தான் வரகவி பாரதியார், "பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே" என்று சொன்னார். ஒரு கூட்டத்திற்கு அடிமையாக வேண்டாம் என்று எண்ணும்போது மற்றொரு கூட்டத்திற்கு அடிமையாக இருக்க முடியுமா? அதனால்தான் அடுத்த அடியாக "வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே என்று சொன்னார்.

ஆனால், இவ்விரண்டு போனதோ, அதுதான் இல்லை...............!

# வில்லெனப் பயந்த குருவி!

(வ. உ. சி. சுப்பிரமணியம்.)

"...........நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

தமிழ்த் தாயின் இரு கண்களென திகழும் 'நாலும், (நாலடியாரும்) இரண்டும் (இரண்டடிகளாகிய குறளும்) நம் பண்டை மக்களின் பண்புகளை சுருங்கக் கூறி விளங்க வைக்கும் நூல்கள்.

தமிழில் தற்போதுள்ள 'சிரஞ்சீவி' (?) இலக்கியத்தில் மேல் நாட்டு ஒப்பு, உவமைகள் குடியேறிப் புகுந்து நிற்கின்றன. ஆனால் அங்கு நல்ல வேளையாகக் குடியேற்ற நாட்டந்தஸ்துப் போர்கள் ஒன்றும் நிகழவில்லை!

இரு கல்லூரி மாணவர்கள் நண்பர்கள், ஒருவன் தலைவன், மற்றொருவன் பாங்கன் என வைத்துக் கொள்வோம்! அக்கல்லூரியில் படிக்கும் பெண் ஒருத்தியிடம் தலைவன் காதல் கொண்டு விட்டான். தன் பாங்கனிடம் தலைவன் பின் வருமாறு கூறுகிறான்:

"அடே! அப்பா அவள் அழகு உனக்கு என்னடா தெரியும்? ஹெலன்னு ஹெலன் தான். பார்த்துக் கொள்ளேன் எப்படி யிருப்பாள் என்று"

பாங்கனும் தலையசைக்கிறான் 'ஆமாம்' என்பதற் கறிகுறியாக! உண்மையில் ஹெலன் கிரேக்க அழகி. அதுவும் பல நூற்றுண்டுகளுக்கு முன் இருந்தாளாம். அவளை நேரில் கண்டவர்கள் போலப் பேசி மகிழ்ந்து கொள்கிறார்கள். அங்கேயும் அவர்கள் நிலைமை 'பங்குக் குறை' யாகவே போய் விடுகிறது! அழகுக்கு உவமை சொல்ல அங்குமிங்கும் தேடிப் பிடித்து மிக்க கஷ்டத்துடன் ஹெலனைப் பிடித்துக் கொணர்ந்து நிறுத்துகிறார்கள்! எங்கே! உங்கள் மனக் கண் முன் சிறிது நேரம் ஹெலன் எப்படி யிருப்பாள் என்று கற்பனை செய்து பாருங்கள்!

நம் நாட்டு அழகிகள் உருவம்தான் தோன்றுகிறது. உண்மையில் அப்படித்தான் தோன்ற முடியும். நாம் நேரில் காண்பவற்றையேதான் கற்பனையில் காண முடியும். அதிலும் பண்பு தன்மையைப் பற்றிப் பேசும்பொழுது நாம் கண்டவற்றையே தான் கற்பனைத் திரையிலும் காண முடிகிறது.

எப்பொழுதுமே இளைஞர்கள் மணந்துகொண்டவுடன் பொருள் தேடப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதாவது பொருள் தேடச் செல்வதற்காகத் தனது காதலியை விட்டு அவன்

தனித்து நிற்க நேரிடுகிறது. இது பண்டைக் காலத்திலும் அப்படித்தான்; இந்த காலத்திலும் அப்படித்தான். இதில் ஒன்றும் வித்தியாசம் தோன்றவில்லை. ஆம்! தலைவன் பொருள் வயினாக தலைவியைப் பிரியாவிட்டால் இன்று நாம் பண்டைத் தமிழ் இலக்கியச் சுவைகளைப் பருகி இன்புற்றிருக்க முடியுமா?

தலைவன் பொருள் மீட்கப் போயிருக்கிறான். அவனுக்குக் காணுமிடம் எல்லாம் தலைவியின் கற்பனை உருவமேதான் தோற்றுகிறது. தன்னையும் மறந்தான். அவன் மனதில் உணர்ச்சி வெள்ளங்கள் ஏற்பட்டு ஒரேயடியாக அடுக்குகின்றன. அவற்றைப் பங்கிட்டுக் கொள்ள ஆள் தேடுகிறான். எப்பொழுதுமே துக்கம் வந்தாலும், மகிழ்ச்சி பொங்கினாலும் நண்பர்களிடம் சொல்லி ஆற்றிக் கொள்வது நம் வழக்கமல்லவா? அதுபோலத் தலைவனும் ஆரம்பிக்கிறான். தனது பாங்கனிடம் தனது காதலியின் அழகைப்பற்றி உரைக்கிறான்.

காதலி பேரழகி. அவள் கண்கள் கயல் மீன்களைப்போல இருந்தனவாம். ஆம்! தலைவனைக் காணாமல் அவள் கண்களில் நீர் தேங்கி நிற்கும். அந்நீரில் தலைவியின் விழிகள் மீன்போல நீந்தும். அவள் விழிகளை மீன் என்று நினைத்த கிச்கிலிக்குருவி விழிகளை கொத்துவதற்காகப் பறந்து சென்றதாம். தலைவனுக்குத்தான் என்ன துணிவு? தன் காதலியின் கண்களைக் கொத்துவதற்காக மீன் கொத்தி பறந்தது என்று சொல்கிறானே! ஈவு இரக்கம் இல்லாதவன் போலும் என்று நமக்கு நினைக்கத்தோன்றுகிறதல்லவா?

ஆனால் தலைவன் சமர்த்தன். அவன் நாயகியைக் காப்பாற்ற அவனுக்குத் தெரியாதா என்ன? ஒரு வில்லைத் தேடிப் பிடித்தான். எங்கிருந்து என்று கேட்கிறீர்கள். தலைவியிடமேதான் அந்த வில் இருந்தது! விழியைக் கொத்திக் கௌவி எடுத்துச் செல்ல பறந்தோடி வந்த அந்த மீன் கொத்தியின் கண்களில் தலைவியின் புருவம் ஆம்! வில்போன்ற புருவம் பட்டது. வில்லைக் கண்டபின் புள் எங்காவது நிற்குமா? எனவே பறந்தது. பாருங்கள் தலைவன் எவ்வளவு அழகாக தன் காதலியின் அழகைத் தோழற்கு எடுத்துரைக்கின்றான். இவ்விதச் சிறந்த பொருளையுடைய செய்யுள் ஒன்று நாலில் (நாலடியார்) இருக்கிறது:

கண்கயல் என்னும் கருத்தினால் காதலி
பின் சென்றது அம்ம! சிறுசிரல்—பின் சென்றும்
ஊக்கி எழுந்தும் எறிகல்லா ஒண்புருவம்
கோட்டிய வில் வாக்கு அறிந்து

---

சிறுசிரல் - சிறிய கிச்சிலிப் பறவை
எறிகல்லா - குத்தித் தின்னமாட்டாது

# நடிகையின் துரோகம்

(தாமன்)

ஜனவரி மாதம் முதல் தேதி பத்திரிகை விற்குமிடத்தை இதற்கு முன் கடைக்கண்ணாலும் பார்க்கச் சகியாத சில பண மூட்டைகளும் பத்திரிகை என்ற பெயரையும் காதுகள் கேட்கச் சகியாத பேய்காத்த பொக்கிஷக் கருங்கல்க் கோட்டைகளும், மோட்டாரில் ஏறிக்கொண்டு "பத்திரிக்கை, பத்திரிக்கை" என்று காதல் பொங்கத் தேடித்திரிந்து, புதுவருடப் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியலைத் துருவிப்பார்க்கும் நாள். இந்தப் "பட்டாபிஷேக" விழாநாள் மாலை நான் வழக்கப்படி கடலரசியின் இயற்கை அழகிலே ஈடுபட்டு அமர்ந்திருந்தேன். கடற்கரையில் சிரிப்பதைக் கேட்டு தலை திரும்பிப் பார்த்தபோது என் நண்பர்கள் பலர் என்னைச் சூழ்ந்து "பல்லூன் பாராஜ்" காட்டி நிற்பதைக் கண்டேன். புத்தாண்டு உபசாரங்களையும் பரிமாறினர். அப்போது என் நண்பரில் ஒருவரான "திருடி" சாமி திரு என்பது தமிழர் சம்ரதாய மரியாதைச் சொல் 'டி' என்பது துரைசாமி என்பதின் முதல் எழுத்து. மாணவர் சுருக்கெழுத்து பறிபாஷையின்படி மிஸ்டர் டி. சாமி என்பதை தனித் தமிழ்ப்படுத்தி திருடி சாமி என்று அழைப்பது. நான் இக் கூட்டத்தின் கொறடா (Wip என்பது) ஏதாவது பேச்சுத் தொடங்கும் சடங்கு முகாமி அவர், அவரும் தமது கௌரவ(கொறடா)ப் பதவிப் பொறுப்புப்படி கடல்மணல் அரட்டைப் பார்லிமெண்டைத் துவக்கினார். "இன்று நண்பர்களாகிய நாம் அனைவரும் இங்கு எதற்காகக் கூடியிருக்கிறோமென்றால், இன்று புத்தாண்டு நாள், அதாவது பொது நலச் சேவை செய்த தியாகிகளைக் கௌரவிக்க, கௌரவப் பட்டமளிக்கும் நாள். விழா ;மத, பேதமற்ற அனைவருக்கும் உரியது. தீண்டப்படாதவர், சண்டாளர் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட, ஆதி திராவிட சகோதரர்களின் திருக்கையால் தயாரித்த சாக்லேட்டுகளையும், தேநீரையும், வெள்ளைத் தெய்வங்களுக்கு முன் பளிங்குக்கல் மேஜைகளின்முன் அமர்ந்து உட்கொண்டால் மோட்சசாதனம் என்று வைதீக பிரம்மாக்களாலும் போற்றப்படும் சர்வ இஷ்ட காரிய மோக்ஷசாதன தினம். இது ஆகவே, இத்தகைய, சர்வமத பத்ய ஜோதிட அகில இன சம்மத அகில தேச விழாவைக் கொண்டாடுவது, மேனாட்டு நாகரீகத்தில் தாசானுதாச பயிற்சி பெறும் மாணவர்களாகிய நமக்கு இன்றி

யமையாத கடமையாகிறது. கடமையை உணர்ந்து நடப்பதே கர்மவீரனின் செயல். எனவே இந்தக் கடமையையுணர்ந்த வீரர்களாகிய நாமும் நடக்கத் தீர்மானித்துள்ளோம். இதன்படி நம்முள் யாருக்காவது கௌரவப் பட்டமளித்துப் பிற்காலத்தில் நடத்தப் போகும் கௌரவப்பட்ட விழாக்களின் ஒத்திகையை, இப்போதே நடத்தி அநுபவம் பெருவதால், பின்னுல் மதி மந்திரி பதவிகளைப்பெற்று சம்பிரதாயப்படி நடக்க வசதிப்படும். எனவே இப்போது நமது நண்பர்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்ளுவ தென்னவென்றுல், நம்முன் கௌரவப் பட்டத்திற்குரிய பிரமுகர்கள் யார் என்று தீர்மானிக்கவேண்டும் என்பதாகும்.

மற்றவர்கள் :—தமிழ்நாட்டு "பெர்னுட்ஷா" (எனக்கு மாணவர்கள் இட்ட பெயர்) இவ்வாண்டு கௌரவப்பட்டம் பெறத் தகுதியுடையவர்.

திரு. டி.:—முற்றும் தகுதியான தேர்வே, என்ன பட்டமளிப்பது என்று தேர்ந்தெடுக்கும் பொருப்பும் சபையோரைச் சேர்ந்ததே.

மற்ருெருவர் :—"சினிமாப் பித்தன்" இந்த சொற்களைத் தொடர்ந்து கிளப்பிய சிரிப்பு முழக்கம் அடங்குவதற்குள் நான் இருந்த இடத்தைவிட்டு தப்பி ஓடி வந்துவிட்டேன்.

ஆனுல் இந்தப் பட்டப் பெயர் எனக்கு முற்றும் தகுதியென்று நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டி இருக்கிறது. அதனுல் நான் பின்னுல், அப்பட்டப் பெயரைப் பெருமையுடன்தான் நானும் கூறிக்கொண்டேன். ஏனென்றுல் சினிமா என்றுல் எனக்கு அவ்வளவு ஆசை. உலகமே சினிமா மயமாக இருக்கக் கூடாதா என்பது எனது ஆசை. நடிகைகளில் மோகனு நடித்த படம் என்றுல் எனக்கு பாதாம் அல்வாவைப்போல். அவள் நடித்தபடம் என்றுல் பரீட்சையையும் மூட்டை கட்டி வைத்து விட்டுச் சென்று பார்த்ததும் உண்டு. இதனுல் பரீட்சையில் "கோட்" அடித்ததும் உண்டு என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகிறேன். இப்படியாக என் சினிமா பித்தம் பிறந்து வளர்ந்தோங்கி, படிப்பைக் கெடுத்து என்னை சினிமா ஸ்டுடியோக்களில் ஒன்றில்க் கொண்டுபோய் தள்ளிவிட்டது. ஸ்டுடியோவில் நான் சேர்ந்த கதை ஒரு இராமாயணம், இரண்டு பாரதம்தான். அதாவது என் பெற்ருேரால் "வரண்டி"யாக்கப்பட்டு, ஸ்டுடியோக்களிலும் மோகினியின் பங்களாவிலாசிலும் நின்று தவம்செய்யத் தொடங்கினேன். ஒருநாள் மாலை நான் மோகினியின் வாசலில் அமர்ந்திருந்தேன். பசி மயக்கம் கண்ணைச் சொருகத் தொடங்கியது. என்ன ஆனுலும் ஆகட்டும் என்று துணிந்து,

உள்ளே போவதென எண்ணினேன். அப்போது ஒருவன் அவசர அவசரமாக சைக்கிளில் வந்தான். நான் கேட்டில் நின்றதால் நான் கேட்பேனென்று எண்ணி என்னிடந் தந்துவிட்டுச் சென்ருன். கடிதத்தைப் பார்த்தேன். என் நெருங்கிய சொந்தக்காரர்களி லொருவர் மோகினியின் அருள் கடாக்ஷத்தைப் பெற'' இன்று வருவதாக எழுதி அனுப்பிய கவர்க்கடிதம் இது என்று பின்னுல் தெரிந்துகொண்டேன். நமக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது என்று எண்ணி நான் சந்தோஷத்தால் ஒரு துள்ளு துள்ளிக் குதித்தேன். சிங்க நடை நடந்து கேட்பியூனை அணுகி நான் திவான் பகதூர் நாயுடுகாரின் அந்தரங்கத் தூதன் என்றும், அம்மாளுக்கு அந்தரங்கக் கடிதம் கொண்டுவந்திருப்பதாகவும் நேரில் பார்க்கவேண்டுமென்றும் கூறி, ஏமாற்றி விட்டு உள்ளே புகுந்தேன். அம்மாள், மறு மோகினியாகக் காட்சியளித்தாள். திவான் பகதூர் நாயுடுவுக்கும் எனக்கும் உருவ ஒற்றுமை கொஞ்சம் உண்டு. மது மோகினியாலும், மது மயக்கத்தால், மதிமயங்கி நான்தான் திவான் பகதூர் என்று எண்ணி என்னை அப்படியே கட்டிப் பிடித்து...................... ....! சரி அவள் மயக்கம் தெளிந்தது. டெலிபோன் மணி கண கணவென அடித்தது. அவள் ரீசிவரை எடுத்துக் காதில் வைத்துக் கேட்டதும், தேள் கொட்டியதுபோல் திடுக்குற்று என்னைத் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் என் பஞ்சைக் கோல உருவம் அவள் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. எழுந்து வந்தாள் காளி வேஷத்தில். ஆனுல் என் முகத்தில் மாயசக்தி இருப்பதாக அப்போதுதான் கண்டுபிடித்தாள். சில நிமிஷத்தில் காளிதேவி காதல் தேவியாகி விட்டாள். காதல் என்பதும் ஏதேதோ கோட்டை கட்டி விடாதீர்கள். இந்தக் காதலர்களுக்கு உரிய வேலை என்ன தெரியுமா? ''இன்டிமாமா,'' சினிமா வானத்தில் உயரக் கிளம்பி பிரகாசிக்க பேராசை கொண்டிருக்கும்போது இந்த வேலையைக் கேவலமாக நினைக்கலாமா ''சரி! இப்படியாக, காதலராகவோ, அல்லது இண்டிமாமாவாகவோ சில மாதங்களைக் கழித்தேன். இப்படியிருக்குங் காலத்திலே, ஒருநாள் என்ன தெரிந்ததென்ருல், தமிழிசைப் போட்டிவிழா ஒன்று நடந்தது, என் மோகினிதான்; நீதிபதிகளின் தலைவராக அமர்த்தப்பட்டாள். போட்டி ஆரம்பித்தது. சிறியவரும், பெரியவரும், ஆண்களும், பெண்களுமாகப் பலர் வந்து பாடிவிட்டுச் சென்றனர். அந்தச் சமயத்திலே பைத்தியக்காரனைப் போன்று தோன்றிய ஒருவன், தானும் பாடப்போவதாகப் பிடிவாதம் செய்ய, நிர்வாகிகள் தடுக்க அங்கு கொஞ்சம் கலகலப்பு உண்டாயிற்று. பாபம் பைத்தியம். கொஞ்சம் தமாஷ் பார்க்கலாம். பாடட்டுமே என்று சபையோரும், நீதிபதிகளும் முக்கியமாக என் மோகினியும் பரிந்து பேசினுர்கள்.

பாடகன் மேடை ஏறினன். பைத்தியம் என்று எண்ணி பரிதாபச் சிரிப்புடன் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கும் மோகினியை ஒரு கழுகுப் பார்வை பார்த்துவிட்டு 'அவன் மைக்குக்கு முன் நின்று பாடலானன். பாட்டா அது! அப்பப்பா இதுவரை இவ்வளவு உள்ளங் கவர்ந்த முறையில், யாரும் பாடியது கிடையாது. சபையோரெல்லாம் மதுவுண்டவர்கள்போல் மயங்கியமர்ந்திருந்தனர். அப்பிச்சைக்காரன் பாட்டை முடித்தான். மோகினியின் பக்கம் திரும்பினன். ஒரு பேய்ச்சிறிப்பு சிறித்துவிட்டு மளமளவென மேடையிலிருந்து இறங்கலானன். ஆனல் "மோகினீ." அய்யோ மோகினி என்ற குரல் ஒரே சமயத்தில் எழுந்தது. ஓடிச் சென்று அவள் பக்கமடைந்து பார்த்தேன். தலை நாற்காலியின் தலைப்பில் அயர்ந்து கிடந்தது. கண்கள் மூடியிருந்தன. கண்ணீர் அவளுடைய மேக்கப் சாயத்தை எல்லாம் கறைத்துத் தண்ணீரைக் கொண்டுவந்து முந்தானையை நனைத்திருந்தது. அதன்பின் பார்ப்பவர்கள் தடபுடல் கதை நாடகத்தை வர்ணிக்கவேண்டுமா? என்ன?

மாதம் ஒன்ருகியும் மோகினி உடல் தேறியபாடில்லை. 30 வயது முத்தல், மேக்கப் தந்திருந்ததால் 16-வயது பாலகியாக்கிக்கொண்டிருந்தாள். இந்த நடு மாதத்தில் 60 வயது குமரியாக மாறிவிட்டாள். முதலில் காதலனுகிப் பின்னர் மாமாவாகிய எனக்கு இப்போது என்ன வேலை தெரியுமா? கௌரவ பாஷையில் "சிக் நர்ஸ்" வேலை 'கர்மரோக ஆஸ்பத்திரியில் காணும், காட்சிகளும், மணக்கும் மணமும் இந்த மோகினி ஒருவள் படுக்கையரையிலே உணரும் பாக்கியத்தைப் பெற்றேன். ஒருநாள் இவள் என்னை சமிக்ஞை செய்து அழைத்தாள். நானும் சென்றேன். யார் யார் இருக்கிருர்கள்? என்ருள்........ஒருவரும் இல்லை.

காமக்களஞ்சியமாக இருந்து இச்சண்டாளி எவ்வளவு அக்கிரமங்களைச் செய்துவிட்டேன்?....இந்த அக்கிரமங்களில், துரோகங்கள் ஒன்றுதான் இப்போது என் உயிரை அரித்துத் தின்கின்றது. என்ன! என்னவா!! அந்தப் பாடகன் யார் தெரியுமா? தெரியாது. அவர் தங்களைப்போன்ற ஒரு புண்ணியாத்மா? இப்படிப்பட்ட புகழ் உலகிற்குக் கொண்டுவந்து அரங்கேற்றியவர் அந்த பிரம்மாதான். என் கதையையும் கூறியாவது என் மனச்சாந்தியுடன் சாகிறேன். நான் ஓர் அநாதைப் பிச்சைக்காரி! தெருவிலே பிடி, பிச்சை வாங்கிப் பிழைத்தேன். ஒருநாள் ஒரு மகானைச் சந்தித்தேன். ஒரு வீட்டில் அவர் எனக்கு வயிருற உணவளித்தார். பின்னர் கொஞ்சம் பாடச் சொன்னர், பாடினேன். எனக்கு நல்ல குரல் இருப்பதாகவும், தன்னிடமே

இருந்துவிட்டால் எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து, உயர் தரப் பாடகியாக்குவதாகவும் சொன்னார். அந்த இசைவாணர் முதலில் ஏதோ எதுவோ என்று பயந்தேன். பிச்சை எடுத்துத் திரிந்தால் பல்லோரால் ஒழுக்கம் கெட்டுத்தானே தீரும். இவர் ஒருவருடனாவது அந்தப் பாபம் ஒழியட்டுமென்று கருதிச் சம் மதித்தேன். நானே ஆச்சரியப்பட்டு விட்டேன் ஆறே, ஆறு மாதத்தில் அவர் என்னை இசை உலக நட்சத்திரமாக்கி விட்டார். இந்தப் பிச்சைக்காரியின் தயவிற்கு தவமிருந்தனர். அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பதுதானே உலகப் போக்கு.

இப்படியிருக்க ஒருநாள் ஒரு பிராமணர் வந்தார். பணக் காரராம், வியாபாரச் சீமானும், உறவு வலுத்தது ரிஜிஸ்டர்டு மணமும் நிறைவேறியது. பாபி அப்போது என் குருநாதனின் காதல் ஆழத்தை உணர்ந்தும், பணத்தாசையால் பிராமணனின் பொய்க்கால் குதிரையைக் கைப்பிடித்தேன். ரிஜிஸ்டர் மணத் திற்குப்பின் தான் அய்யர், டம்பாச்சாரி நாடக பாத்திரமான அய்யர் இனம் என்று அறிந்தேன். செக்கில் அகப்பட்டுக் கொண்டபின் பயப்பட்டால் ஆகுமா? என் இசைச் செல்வத்தை யும், அழகுச் செல்வத்தையும் கொண்டு அய்யர் தமது தொந்தி யையும், தமது சொந்தக் குடும்பம் உற்றார் உறவினரின் தொந் தியையும் வளர்த்து வந்தார். என்பாடோ ஒரு பைசா வேண்டு மானாலும் அய்யரின் பொடிமட்டையைத்தான் எடுத்துப் பார்க்க வேண்டும். அடிமையிலும் கேடுகெட்ட அடிமைதான். உங்கள் மாமாவின் உபகாரத்தால் அய்யரின் ரிஜிஸ்டர் மணத்தை ரத்துச் செய்தேன். ஒரு வருடத்திற்குமுன் அன்று விழாவின்போது வந்து பாடிய அந்த குருநாதன்தான். நான் பிராமணனை மணந்துகொள்ளப் போவதாக அவரிடம் சொன்னபோது, அவர் முகம்போன பரிதாபத்தைப் பார்த்ததும், என் உயிர்நாடி விட் டது என்றே சொல்லலாம். அவர் வாய் திறந்து "வேண்டாம்," என்று ஒரு வார்த்தை சொல்லி இருந்தாலும் போதும் உலகமே ஒழிந்தாலும் அவரைவிட்டு பிரியமாட்டேன். அப்போது அவரோ மர்மப் பேர்வழி. ஒன்றும் வாய் திறக்காது, சரி உன் விருப்பம் என்றார். நான் அதைத் தவறாகச் சம்மதக்குறி என்று எண்ணி விட்டேன். ஆனால் மறுநாளே குருநாதர் மாயமாகி விட்டார். அன்று போனவர் விழாவில் வந்து பாபி என் துரோகத்திற்கு தக்க மரண தண்டனையை விதித்துவிட்டு மறைந்தார். அந்த ஆண் டவன், என் ஆண்டவன் என்று உச்சரித்தபடியே சினிமா மோகி னியின் வாழ்க்கை நாடகமும் முடிந்தது சினிமாப் பித்தமும் என்னை விட்டு ஓடிவிட்டது.

---

# மக்கள் யார் . . .
# . . . மாக்கள் யார்?

"தீப்பொறி"

உலகில் தோன்றிய பிறவிகளுக்குள்ளே மக்கட் பிறவி உயர்ந்ததென்று கருதப் படுவதனால்; அவர்களுக்கும் மற்ற எல்லாப் பிறவிகளுக்கும் இல்லாத ஒரு தனியான, மேம்பட்ட உணர்ச்சியோ, சக்தியோ இருந்துத்தான் தீரவேண்டும். அப்படி இருப்பதை அறிந்தஆசிரியர் தொல்காப்பியனாரும் தமது நூலிலே உலகிலுள்ள தாவரங்களிலிருந்து மக்கள்வர்க்கம் ஈறாக உள்ளவை களின் அறிவைச் சொல்லும்பொழுது, "மக்கள் தாமே ஆறறி உயிரே," என்று கண்டு சொன்னதிலிருந்து, மற்ற இவ் வுலகி லுள்ளவைகளுக் கெல்லாம், மக்களைவிட குறைந்த குறைவுபட்ட அறிவுதான் இருக்கவேண்டும் என்று பெறப்படுகிறது.

ஆனால் மக்கள் பெரும்பாலும் "பகுத்தறிவு" எனுமொரு சொல்லால் உயர்ந்தோராக எண்ணிக் கொள்கின்றார்களே ஒழிய, தம்மை உயர்வு படுத்தும் அப் பகுத்தறிவு, எப்படி, எவ்வாறு, தம்மிடம் பிரதி பலிக்கிறது என்பதை சிந்திப்பவர் ஒரு சிலரே ஆவர்.

உலகில் காணக்கிடைக்கும் எந்த உயிருடைய வர்க்க மும் தன், தன் தேவையைப் பூர்த்தி, செய்துக்கொள்வதில் பின் வாங்குவதில்லை என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்தால் நன்கு உணரமுடியும். ஆகையால் மனிதன் தன் தேவைக்கானவற்றை கண்டுபிடித்துச் செல்வதினால் மட்டும் உயர்ந்தோனாய் விடுவானா என்றால் இல்லவே இல்லை என்றே எண்ணநேரிடுகிறது.

மனிதன் இன்று 'மின்சார விளக்கொளி கண்டுபிடித்துவிட்ட தால் மாத்திரம் உயர்ந்தோனாக மிருகங்களைவிட கருதப்படு மானால்' அது முழு சிந்தனையற்ற தன்மையின் வாயிலாக வெளி வந்தவையே. விளக்கொளியைக் கண்டுபிடித்தான், மக்கள் அனுபவிக்கிறோம், அது நமக்குத் தேவையாகிறது. அதேபோல் மிருகங்களும் "எலக்டிரிக் லயிட்" போட்டுக்கொண்டு வாழ முடி யாததொரு காரணத்தால் குறைத்துச் சொல்லுதற்கு முன்னால், மிருகங்கள் வாழ்ந்துவரும், காட்டிற்கும் குகைக்கும், கூட்டிற்கும் மின்சார விளக்கு எதுவரையில் 'தேவை' என்பதையே சிந்திக்க விரும்புகிறேன். மின்சார விளக்கு அதற்கு தேவையா? "கிராம

போன் ரிகார்டு வைத்துக் காதுகுளிரக் கேட்டு வாழவேண்டுமா? அதுவுமில்லை, மற்றென்ன? அது, தன் தேவைகளை அவ்வப் பொழுது பூர்த்திசெய்துக் கொள்கிறது.

மனிதர்கள்தான் தங்கள் தேவைகளை என்னவென் றுணராமலும், பூர்த்தி செய்துகொள்ள முடியாமலும், தவிக்கிறார்கள், சாகிறார்கள், மிருகங்கள் மனிதஇனத்திலும் உயர்ந்த சுதந்திர வாழ்க்கை நடத்துவதை எண்ணும் போதும், காணும் போதும், மனிதன் தனக்கு சுதந்திர எண்ணமே எழாது வாழும் பலகோடி மக்கள் அதனிலும் கேவலமானவர்கள் அல்லவா? தனது சிந்தனையற்ற தன்மையும், சக்தியின் குறைவும், தன்னம்பிக்கை இழந்ததின் நிமித்தம் அடைந்துவிடுகிறான் என்பதை எண்ணுவதில்லை.

உண்மையிலேயே மனிதனிடம் பகுத்தறிவுளதாயின், அது "ஆக்கத்தின் இன்பத்தில்" பிரதி பலித்தாலல்லாது ஒப்புக் கொள்ள முடியாது. இன்றைய உலகில் அழிவில் இன்பம் காண்கிறது. அழிவில் பகுத்தறிவு பிரதிபலிக்கிறது.

அழிவில் காண்பனவெல்லாம் பகுத்தறிவா? இயற்கை அனைத்தும் தற்காப்பின் நிமித்தம் அனேக ஆயுதம் தாங்கியே நிற்கிறது. மக்கள் சிந்தனையற்ற தன்மையில், மனதின் தன்மையுணராது, மனோசக்தியின் வலிமை அறியாது, பழகாது, இயற்கையின் உற்பத்தியைப் பாழ்படுத்தி மடியச் செய்வதுதான் பகுத்தறிவின் எடுத்துக்காட்டாக இன்று இருக்கிறது.

ஆக்கத்தில் இன்பத்தைக் காண்பதே பகுத்தறிவு - அழிவில் இன்பத்தைக் காண்பதனைத்தும் மடமை—மடமை—மடமை, எனப் பெயர் பெருகிறது என்பதை மனிதன் நினைக்கட்டும்.

இப்பொழுது உலகிலே தோன்றும் விஞ்ஞானம், பகுத்தறிவு ஆராய்ச்சி விளைவின் பயனாக படைக்கப்பட்டதுதான். ஆனால் அதை படைத்த மனிதன் அதைத் தனக்கு அடிமைப்படுத்தி, மக்களுக்கு வேண்டிய குறைந்த சிலவில், அதிக பயனை அடையக் கூடியதும் வாழ்க்கையிலே தனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொள்ளுவதற்கும் அறிவின் பயனால் விளைந்த விஞ்ஞானத்தை பயன்படுத்துவது தான் பகுத்தறிவாக இருக்க முடியுமே தவிர, தனது அறிய ஆராய்ச்சியின் பயனாக விளைந்த விஞ்ஞானத்தை. தங்களைப்போல் படைக்கப்பட்ட மக்களையும், அவர்களுக்கு பயன்படக் கூடிய சொத்துக்களையும் அழிப்பதானது "கண்ணிருந்தும் குருடர்கள்" என்ற தன்மையில் கொண்டுவந்து அறிவுமிக்க மக்களை, மாக்கள் நிலைமைக்கு ஆளாக்குகிறது. இந்தத் தன்மை அடைவது மனிதருக்கு முற்றும் மாறுபட்டது. இன்னும், மக்களுக்கு பயனளிக்கக்கூடிய யந்திரங்கள், காலத்தை வரையறுத்துக் காட்டும் கடிகாரம், மக்கள் மனத்திலே வந்தடை

யும் துக்கத்தை மாற்றி தனது தட்டுக்களின் மூலமாக மனத்தை மகிழ்விக்கும் இசைத்தட்டுப் பெட்டிகளும், வருந்தாமல் சுலபமாகவும்; விதரவாகவும் மாற்றூரிலிருந்து தம்மூருக்கும், தம்மூரிலிருந்து மாற்றாருக்கும், மனிதனைச் சுமந்து செல்லும் வாகனங்களும், ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திலுள்ளவரிடம் சம்பாஷிக்க உதவும், டெலிபோன் போன்ற சம்பாஷணைக் கருவிகளும் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்திற்கு விரைவினில் விஷயங்களைத் தெரிவிக்க உதவும், தந்தி யந்திரங்களும், அதே போல் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் நேர்ந்த விஷயங்களை ஒரே நேரத்தில் பல விடங்களுக்கு பகிர்ந்தளிக்கும் ரேடியோ போன்ற ஒலி பரப்பிகளும் தோன்றியதோடல்லாமல் உலகில் மூன்று பங்கு நீர் நிறைந்த பரப்பைக்கடந்து அநேக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நிலப்பரப்பை அடைய வழிகாட்டி மக்களை நீரின்மேலே மிதந்து இழுத்துச்செல்லும் கப்பல்களும், இன்னும் குறுகிய நேரத்திலே யாதொரு தடங்கலுமின்றி ஆகாயத்திலே மக்களைச் சுமந்துகொண்டு பறந்து செல்லும் ஆகாய விமானங்களும், இன்னும் இவைபோன்ற அநேகமும் மக்களின் தேவையின் விளைவால் ஏற்பட்டது.

ஆனால் அதே யந்திரங்களை மனிதன் மாறுபட மதித்துப் பயன்படுத்தி மக்களை மாய்ப்பது மடமைத்தனமாகுமன்றி, மதி மிகுந்தவர் செய்கையாகாது. அதேபோல் மக்களின் வாழ்க்கையை வளமுறச்செய்யும், நாகரீகத்தை வெளியே நவிலும், மக்களுக்கு பழைமையையும், நம்ப முடியாததும், அறிவுக்கு வேலைதராது அதை அவமதிக்கக்கூடியதுமான புராண, இதிகாச, இலக்கண, இலக்கியங்களையும் பகுத்தறிவுக் கண்கொண்டு நோக்கிக் கொள்வன கொண்டும், தள்வன தள்ளியும் போற்றி, மக்களுக்கு வாழ்க்கையிலே பயன்படக்கூடியதும், பாட்டாளி மக்களின் வறுமையைப் பகைத்து அவர்களுக்கு வாழ்க்கையிலே வெறுப்பை அறுத்து, விருப்பை இறுத்தி மக்களை மறுமை என்று மாறுபட்டமையை விடுத்துக் கனவிலும் கருதமுடியாத கற்பனைகளை ஒழித்து "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற முறையிலே மக்களை மாண்புமிக்க தன்மையிலே திருப்புவதும் பகுத்தறிவு தான் ஆனல் மக்கள் மதிப்பை இழக்கும்படி செய்வதும் பகுத்தறிவுதானு? அது இல்லாவிட்டால் எவ்வாறு அந்த எண்ணங்கள் 'நிகழமுடியும் என்று கேட்கலாம்' மனிதன் தனது சாதாரண உபயோகத்திற்கும் ஏற்படுத்திக்கொண்ட கருவியாகிய "கத்தியை" தம்மையொத்த மக்களை கொலை செய்வதற்குப் பயன் படுத்துவது போலத்தான் முடியும். அப்படிப்பட்ட பகுத்தறிவின் நிலையையும் இது பாராட்டத்திற்குறியதன்று. ஆனல் உலகிலே, வஞ்சனை சூது, கொலை, குடி முதலியவைகள் அறிவுமிக்க மக்கள் குழாத்தில்

(தொடர்ச்சி 38-ம் பக்கம்)

# அகமே புறம்

"இராகுலன்"

'பலதுளிபெரு வெள்ளம்' என்பது சாதாரணமாக நம்மிடையே வழங்கும் ஒரு பழமொழி. ஆனால், இதன் உள்ளார்த்தம் மிகவும் விரிவானது. நாம் வசிக்கும் உலகத்தை இரு முக்கிய கூறாக பிரித்திருக்கிறார்கள். ஒன்று புற உலகு. மற்றொன்று அக உலகு. நாம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்ச இந்திரியங்களினால் தொட்டு, சுவைத்து, கண்டு, நுகர்ந்து, கேட்டு அனுபவிககும் உலகே வெளி உலகு. அதாவது புற உலகு. நமக்கு இன்னும் சில அதிகமான இந்திரியங்கள் இருந்தால், இன்னும் வெவ்வேறு விதமான காட்சிகளையும் நாம் அனுபவிக்க இயலும் என்று நமது நாட்டில் பிறந்த தீர்க்கதரிசிகள் கூறியுள்ளனர். ஆகவே ஐந்து இந்திரியங்களால் அனுபவிக்கும் உலகம்தான் எல்லாம் இன்று நினைப்பது தவறு. அக உலகும் இது போன்று விசாலமாக பரந்து கிடக்கிறது. வெளியிலே செல்லும் இந்திரியங்களை சிதறவிடாமல் ஒருமைப்படுத்தி அடக்கி உள்முகமாக திருப்பினால் நமது அக உலகு வெளிப்படும். அவ்வுலகினின்று தான் கோடானுகோடியான எண்ணம், ஆசை, வெறுப்பு, கோபம், அகங்காரம் என்ற அலைகள் வெளி வருகின்றன. இதை சித்தக்கடல் என்றும் எண்ண அலைகள் என்றும் கவிகள் சித்தரித்து கூறுவதுண்டு.

இனி புற உலகின் முக்கிய அம்ஸங்களை நோக்குவோம். பிருதிவி அல்லது மண், அப்பு அல்லது நீர், தேயு அல்லது நெருப்பு, வாயு அல்லது காற்று, ஆகாயம் அல்லது வெட்டவெளி என்ற பஞ்ச பூதங்களாக புற உலகை நமது நாட்டு ஆன்ம விஞ்ஞானிகள் பிரித்திருக்கின்றனர். இந்த ஐந்தினைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. "அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை" என்று சாதாரண வீதியிலே செல்லும் தற்காலக் கல்வி இல்லாத மனிதர் கூறுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். இந்த ஐந்து பூதங்களில் பிருதிவியும், ஆகாயமும் என்றும் பழுதில்லாத பொருள் என்று அர்த்தம்.

இனி மண் அல்லது பிருதிவியை நோக்குங்கள். பரந்த நிலப் பரப்பைக் காண்கிறோம். தூலமான பிரமாண்டமான இமயமலையிருந்து, கடற்கரை குறுமணல் வரை எடுத்துக்கொள்ளுங்கள் மலை, குன்று, திட்டு, கல், கூழாங்கல், மணல், தூசி, இன்னும் தூசிக்கும் சிறிய காற்றில் பறக்கும் அணு. அணுவிற் சிறிய பரமாணு; எலெக்டரான்ஸ் ப்ரோடான்ஸ் (Electrons & Protons) என்று நவீன விஞ்ஞானிகள் கூறும் வெகு நுண்ணிய அணு, இவை எல்லாம் பிருதிவியின் இனமாகும். மலை திடீரென்று நில மங்கையின் வயிற்றிலிருந்து வெடித்து வெளித் தோன்றியதா? இல்லை. நுண்ணிய அணுக்கள் சேர்ந்து, கலந்து திரண்டு, உருண்டு

பரிணமித்து வளர்ந்து உருவாகியே இம்மலை தென்படுகிறது.

ஆகவே, மலை என்பது என்ன? அணுக்களின் சேர்க்கையே என்பது தெளிவுபடும். இனி நீரை எடுத்துக் கொள்ளுங்கள்.

கடலை பார்த்திருப்பீர்கள் — எங்கும் நீர்மயம். எல்லா ஆறுகளும் பொங்கி, வழிந்து, ஓடி புகுந்து கலந்துப் பரந்து காட்சி அளிப்பது தான் கடல். ஆறு, குளம், குட்டை, கேணி, ஊற்று இவைகளில் எல்லாம் ஒரே நீர்தான். எல்லாம் நீர்த் துளி பல பெருகி, பிரமாண்டமான வெள்ளமாகிறது. நீர்த்துளி, வானின்று இறங்குகிறது. வான், கடல் நீரைப் பருகி, மறுபடியும் கடலுக்கே அனுப்பிவிடுகிறது. கடல் வற்றிவிடுமென நினைக்கிறீர்களா? வற்றினால் அந்நீர் எங்குச் செல்லும்; மண்ணில், தானே சுவறும். இல்லையேல் சூரிய வெப்பத்தால் வான்நோக்கி பிரயாணமாகும். ஆகவே மழைத்துளியும், கடல் வெள்ளமும் ஒன்றுக்கொன்று வெவ்வேறு இல்லை. துளி இல்லையேல் வெள்ளம் இல்லை. வெள்ளமாவதற்கு துளி அவசியமே! மிகமிக அவசியம்தான்.

இனி நெருப்பாகிய மூன்றாவது பூதத்தை நோக்குங்கள். சிறிய தீப்பொறி முதல் வடவாக்கினி, நட்சத்திரம், சூரியன் போன்ற அக்கினிக் கோளங்கள் யாவும் ஒருமைப்பாடு பெற்று விளங்குகிறது.

வாயுவும் இதுபோன்றதே. சண்டமாருதம். சூறை, சுழல்காற்று, தென்றல், பருவக்காற்றுகள் இன்னும் நாம் இழுக்கும் மூச்சு, இவை யாவும் ஒன்றே என்பது தெளிவானதே.

ஆகாயம் என்னும் பெருவெளியில்தான் மற்ற பூதங்கள் இயங்க வேண்டும். காற்று நின்று வீசுவதும் அக்னி நின்று எரிவதும், நீர் நின்று பாய்வதும் பூமி பரந்து கிடப்பதும் எங்கே? இந்த பரந்த பிரமாண்டமான பெருவெளியாகிய ஆகாயத்தில் தான். துளியும், வெள்ளமும், பொரியும், வடவையும், மூச்சும், சண்டமாருதமும், அணுவும், மலையும் இயங்கி நிற்பது இந்த ஆகாயத்திலேதான்.

ஆகவே, நாம் ஒன்றை அறிந்தால் அதன் இனமாகிய மற்ற ஒன்றை அறிந்தவர்களாகின்றோம். ஒரு பானைச் சோற்றை பதம் பார்ப்பது ஒரு சோறினால்தானே!

இனி அக உலகின் முக்கிய அம்சங்களை நோக்குவோம்.

பிரமாண்டமான புற உலகின் இயல்பை ஆராய்ந்து அறிவது எது? மனிதனின் அறிவே? நமது தேகமோ, அழிவது. இதுவும், சதை, ரத்தம், எலும்பு, மூச்சு, பிராணன் போன்றப் பஞ்சபூத தத்துவங்களினால்தான் உண்டாகி யிருக்கிறது. நாம் தூங்கும்போது வெளி உலகை காண்கிறோமில்லை. ஆகவே, அழிந்துப் போகும் சரீராதிகளெல்லாம் நுண்ணிய அறிவினாலேயே வெளி உலகை காண்கிறோம். ஆகவே மனிதனின் அறிவு எல்லாவற்றிற்கும் மேம்பாடானது என்று விளங்குகிறதல்லவா? வெளியுலகை மனிதன் தன் அறிவினால் அடக்கி ஆள்கிறான். பூமியைக் குடைந்து, தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்களை எடுக்கிறான். கடலில் மூழ்கி முத்து எடுக்கிறான். கடலை கடக்க கப்பல் கட்டுகிறான். வானில் விளங்கும் கோளங்களைப் படித்து அறிகிறான். காற்றின் சக்தியை அளக்

கிறுன். வெளிச்சம் வரும் வேகத்தைத் தெரிகிறுன். இடியின் ரகசியத்தை தெரிகிறுன். இன்னும் எத்தனையோ இயந்திர சாதனங்களைக் கண்டு பிடிக்கிறுன். இவையெல்லாம் மனிதனின் அறிவுப் பெருமையை விளக்குகின்றன. தன்னுளே தோன்றி வெளிகிளம்ப முயலும் எண்ணங்களை சிதறவிடாமல் ஒன்றுபடுத்தி இவ்வறிவைப் பெருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், எவ்வாறு துளி இன்றி வெள்ளம் இல்லையோ அவ்வாறே சிறிய எண்ணம்(அதாவது விருத்தி) இன்றி அறிவு விளங்குவதில்லை.

மலையிலிருந்து வேகமாக இழிந்து ஓடும் நீரைத் தடுத்து திரட்டி ஒருமுகப்படுத்தி மின்சார சக்தியை உண்டாக்குவதை நீங்கள் படித்திருக்கலாம். அதுபோல் நமது சித்தக் கடலிலே தோன்றும் ஒவ்வொரு எண்ண அலைகளையும் திரட்டினுல் அறிவுச் சேர்க்கை விளங்குகிறது.

எண்ணங்களை சிதைத்து உருக்குலையச் செய்வது பேராசை. கோபம், இச்சை, துக்கம், சோம்பல், நோய் போன்ற பகைவர்களே ஆகவே சரீரத்தையும், மனதையும் தூய்மையாக பாதுகாக்கவேண்டுமெனில் மேற்கூறிய பகைவர் தெரிந்தோ, தெரியாமலோ 'படையெடுப்பு' செய்யாது சர்வ ஜாக்கிரதையாக இருத்தல் அவசியம். கவியரசன் பாரதி, குமுறிக்கொட்டிய மணிவாக்கைக் கேளுங்கள்,

"சுற்றி நில்லாதே போ—"பகையே"
துள்ளி வருகுது வேல்"

இந்த பகைவர்களை நாலு திக்கிலிருந்தும் நம்மீது "குண்டு வீசவோ", "டார்பிடோ" செய்யவோ, 'அகழ்' வெட்டி, அரணைத்தாக்கவோ நாம் அனுமதித்துவிட்டால் நமது தேகமாகிய நிலம் மாண்டு, மனமாகிய "தங்கச் சுரங்கம்" "பறிமுதல்" ஆகிவிடும் ஜாக்கிரதை.

ஆகவே துள்ளி எழுங்கள். நம்மைக் கீழ்மை ஆக்கும் எண்ணங்களை 'அறிவு, என்னும் வாளினுல் வேரற வெட்டி களையுங்கள். 'சக்தி' எனும் ஒளி வீசும் 'வேலை' உயர்த்துங்கள் 'அறிவு'க்கொடி பிடித்து, 'அறப் போர்' செய்து 'சத்திய' நாட்டை ஸ்தாபிதம் செய்யுங்கள்.

தங்களின் "தூய" எண்ணம் ஆகிய சிறிய "மழைத்துளி" பரந்த அறிவுக்கடல் வெள்ளப் பெருக்கை உண்டாக்கட்டும்.

வாழ்க பாரதம்! வாழ்க வையகம்!!

(35- ம்பக்கம் தொடர்ச்சி)

தாண்டவமாடுவதால் அதைவிட, மேற்கெடுதல் இல்லாத மிருகங்கள் அந்த மக்களினும் சிறந்தனவாக கருதப்படுவது நியாயமே. ஆகையால் மக்கள், மக்கள் உருவத்துடன், மாக்கள் அறிவுடன் வாழாமல், மக்கள் அறிவுடனே பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழ்ந்தால். அறிவுக்கு அவமதிப்பில்லாது, மக்களுக்கு மதிப்பைத் தரும். இதை நாங்கள் உயர்ந்த பிறவி பகுத்தறிவுடன் வாழுகிறோம். விஞ்ஞான உலகிலே என்று பெருமை யடித்துக் கொள்ளும். மக்கள் கவனிப்பார்களா ?

# என் தந்தை

(ரெத்தினம்)

உலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வந்துதவிய பெற்றோர்களை எண்ணும்போது அவர்களுக்கு பலவிதமாக எழுச்சிகள் மனதிலே தோன்றக்கூடும். தங்கள் வாழ்க்கையிலே வறுமையை நினையாது அதிலே வாடாது கல்வியறிவை யூட்டி தன்னை ஒரு மனிதன் நிலைமைக்கு பொருத்த மான தன்மையை ஏற்படுத்திக் கொடுத்த தாய்தந்தையரை அவர்களின் புத்திரர்கள் போற்றுமலிருக்க முடியாது. இதை விடுத்து தனத்தை மனப்போன போக்கில் சிலவழித்து, குற்றத் தையும், கொடிய பழக்கத்தையும் கைக்கொண்டு, மக்களுக்கு கல்வியறி வூட்டாது கண்டபடி காலங்கழித்து மக்களை கலங்க வைத்து, கடங்காரனுக்கி விட்டுச் சென்ற பெற்றோர்களை அவர் தம் மக்கள் போற்றுவார்களா? அதற்கு பதிலாக தூற்றி அவர் இறந்த பின்னும் அவர்களுக்குப் பல சாபங்களை ஈந்துகொண்டே இருப்பார்கள் தங்கள் மனம் புழுங்கிய தன்மையிலே.

உண்மை, தம் மக்களை இளம் வயதிலிருந்தே செவ்வனே வளர்த்து, அவர்களுக்கு நேரிய முறையில் சீறிய வாழ்வைக் கற்றுக் கொடுத்து நல்லொழுக்க முள்ளவர்களாக்கியும் அவர்கள் இளமை யில் நிலைமையறியாது தீயவழியை நினைக்கினும், அதை மறுத்து, கண்டித்து, அதை வெறுக்கும்படி செய்து, புதுமைக் கருத்துக் களில் மக்களின் மனம் ஈடுபட்டால் அதைக்கண்டு பிரளாது நன்றெனப்பட்டால் அவர்களுக்கு ஊக்கம் காட்டி, உற்சாகமூட்டி அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துவது பெற்றோர்களின் கடமை.

அஃதேபோல் பிள்ளைகளும், தமது தாய் தந்தையர் கட் டளைக்கு பயந்து, மரியாதை செலுத்தி, சிரமேற்கொண்டு நடந்து, தீயவழிகளை விடுத்து தம் அறிவுக்கு நன்றெனப்பட்டதை அவர்க ளுக்கு எடுத்துச் சொல்லி, நம்பிக்கையை யூட்டி நாணயமுள்ள தன்மையிலே நடந்து அவர்களை பேணிக் காத்தல் பிள்ளைகளின் கடமை.

இவ்விரு முடிபுகளை விடுத்து, ஒரு சாரார் மற்றொரு சாரா ரின் கொள்கைக்கும், எண்ணங்களுக்கும், பொதுவான நீதிக்கும், பொருத்தமான பாதையிலே நடப்பதை விடுத்து, மாறினால் பிள்

ளைகள் துன்பமடைவதையும், பெற்ருேர்கள் துன்பமடைவதையும் பாருலகில் நேராகக் காண்கிருேம்.

என் தந்தையைப்பற்றி எனக்குத் தெரிந்ததை வெளியில் சொல்ல மைந்தன் என்ற தன்மையிலும் என் கடமை என்ற முறையிலும் எண்ணி, தொழிலாளி தொழிலாளியாகவே, வாழ முடியாது. முதலாளி, முதலாளியாகவே வாழமுடியாது என்ற பொதுவுடமைக் கருத்துக்களைக்கொண்டு காலச்சக்கரம் மாறும் பொழுது மக்கள் ஒவ்வொருவருடைய நிலைமையும் மாறித்தான் தீரும் என்ற முக்கியத்துவத்தை மெய்ப்பித்துக் காட்டியும், "முயற்சி திருவினையாக்கும்" என்ற வள்ளுவர் மூதுரையை நினைவூட்டிச் சென்றதால், உங்கள் முன்னே அவரை அறிமுகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

செங்கல்பட்டு ஜில்லாவில் மிகச் சிறிய கிராமந்தான் "கீழ்க் கட்டளை" என்பது. அதில் 1886 ஆண்டு அக்டோபர் மாதம் பத்தொன்பதாந் தேதி அவதரித்தார். தாய் தந்தையர்களால் சீரிய முறையிலே வளர்க்கப்பட்டார். எங்கள் குடும்பத்தின் பட்டப் பெயர் "சுரோத்தியதார்," குடும்பம் என்று குறிப்பிட்டாலும் என் தந்தையின் வாழ்க்கையோ, இளமையிலிருந்தே பெரிய போராட்டமாகத்தான் இயங்கி யிருக்கிறது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் எனது பாட்டனர் சுந்தரவேல் முதலியார் அவர்களுடைய நண்பர் ஒருவருடைய வீட்டில் கல்வி கற்க அனுப்பப்பட்டார். அப்பொழுது என் தந்தையை பராமரிப்பதற்காக மாதம் ஐந்து ரூபாய் வீட்டாருக்குக் கொடுக்கப்பட்டது. அந்தப் பொருளுதவியும் சிலகாலத்திற்குப் பின் செய்யமுடியாமற் போகவே அவரை ஏதாகிலும் கைத் தொழில் கற்றுக்கொள்ள வற்புறுத்தினர்களாம்.

எந்தையின், கல்விக்கு கஷ்டம் வரவே கைத்தொழிலே சிறந்ததென்று எண்ணி ஒரு அச்சகத்தில் வேலைக்கு அமர்ந்தார். ஒன்றிலிருந்து அநேக அச்சகத்தில் வேலை கற்றுக்கொண் டிருக்கும்பொழுதே ஒரு "வி. பி." கம்பெனியை தனது சிறிய வருவாயிலிருந்து ஒதுக்கி வைத்த முதலிலிருந்து வாங்கினர்.

அந்த வி. பி. கம்பெனியை இரவில் கவனித்துக்கொள்வதும் பகலில் "விவேகானந்தர் அச்சகத்தில் உழைப்பதுவுமாகமே இருந்து வந்தார். இரவில் தனது வி. பி. கம்பெனியின் சாமான்கள், மணியார்டர் முதலியவைகளைப் பதிவு செய்துகொள்ளுவதாம். பலவித இன்னல்களுக்கிடையே தீராத உழைப்பின் பயனே, "புயலுக்குப்பின் அமைதிபோல"; "வெள்ளத்திற்குப் பின் வெறுந் தரைபோல"; சின்னுட்களுக்குப் பின் அச்சகம்

ஒன்று சொந்தத்திற்கு வாங்கித் தன்னிடம் கஷ்டம் என்ற பெய ரால் வரும் எவர்க்கும் உழைப்பின் மகிமையைக்கூறி, உழைப் பாளியாக்கி உதவிபுரிந்ததோடு, அநேக ஏழைக் குடும்பங்களின் நன்மைகளி லொன்றாகிய விவாகச் சடங்குகளைத் தன் செலவில் நடத்தி வைத்திருக்கிறார்கள். இன்னும் வறுமையால் வாடி நலிந் தோர்க்கும் பொருள் பல வழங்கி போற்றியுள்ளார். இவற்றை யெல்லாம் வெளியிடுவது தற்புகழ்ச்சியின் பொருட்டல்ல. பிறர் உழைப்பைக் கவருவதிலேயே கண் ணும், கருத்துமாயுள்ள சில முதலாளி களும் கவனித்தொழுக வேண்டும் என்பதை யறிந்து குறைகூறாது நடப் பார்கள் என்ற நம்பிக்கை நாட்டப் பட்டிருப்பதுவே. மேலும் முதன் முதலில் வடநாட்டிலிருந்த "கலர் பிரின்டிங்" முதலிய தொழிலைச் செய் யும் யந்திரத்தை தமிழ்நாட்டிற்கு கொணர்ந்தபெருமை எம்தந்தைக்கே யுரியது. "ஸ்ரீ பாரதி பஞ்சாங்கம்" என்ற தமிழர்களுக்கு முக்கிய நன் னாளாகக் கருதப்படும் நாட்களும்,



திருவிழாக் காலங்களுக்கும், நட்சத்திரக் குறிப்புகளும், குறிக்கப் பட்டு தமிழ் நாடெங்கும் பிரகாசிக்கக் கூடியதும், பெயர்பெற்றது மான, பஞ்சாங்கங்களில் சிறந்தது "ஸ்ரீ பாரதி பஞ்சாங்கம்" என்று பல்லோரால் புகழப்படுவதுமான சோதிட கணிதங்களுக்கு துணைபுரிவதுமான "ஸ்ரீ பாரதி பஞ்சாங்கத்தைத் தமிழ் நாட்டுக் களித்த தனிப்பெருமை என் தந்தைக் குறியதாகும். அவர் இன்னும் பல நாட்கள் எங்களுடன் வாழ்ந்திருந்தால் எங்களுக்கு நவயுகத்தில் நடமாடுவதற்கு வேண்டிய புத்தம்புதிய சீரிய வாழ்க் கையை நடத்த நேரிய வழிகளைக் காண்பித்திருக்கக்கூடும். ஆனால் போதுமென்று நினைத்து, பூலோகம் விடுத்து புகழுடம்பு எய்தி, புறப்பட்ட எந்தை புத்தாண்டுதோறும் புது வாழ்த்து வாழ்த்தி எங்களைப் புனிதப்படுத்துவாராக.